REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 12 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 10 | Thursday 12, January, 2023 | 16 பக்கங்கள் | 50/-




முன்னாள் ஜனாதிபதிகள் மீதான தடைகள்:

## கனடா அரசின் செயற்பாடு; இலங்கை அரசு அதிருப்தி

### கனடா தூதுவரை சந்தித்து அலிசப்ரி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனடா அரசாங்கம் தடைகளை விதித்தமை தொடர்பில் இலங்கை தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் ஆகியோருக்கு இடையில் நேற்று (11) புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே

06

## கொழும்பு மாநகர சபைக்கு SLPP, UNP இணைந்து போட்டி

### யானைச் சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக தகவல்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட

06




## ஜனாதிபதி ரணிலை சந்தித்த அமெரிக்க உயர் பிரதானிகள்



இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியாவுக்கான சிரேஷ்ட பணிப்பாளர் எலைன் லோபச்சர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில், ஜனநாயகம், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், உலகளாவிய சூழலை மேம்படுத்துதல் மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையேயான 75 ஆண்டுகால இரு நாட்டு நட்புறவு, இலங்கை மக்களுக்கு அமெரிக்கா அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியாவுக்கான சிரேஷ்ட பணிப்பாளர் எலைன் லோபச்சர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

### வடக்கு, கிழக்கு தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டதும்

# மலையக, முஸ்லிம் மக்களது பிரச்சினைகளுக்கும் தீர்வு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக சிரேஷ்ட அதிகாரி தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசில் வடக்கு கிழக்கு தமிழரது பெரும்பாலான பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வுகாணப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட அதிகாரி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்புடன் தீர்வு வழங்கப்பட்டதும் உடனடியாகவே மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளின் கீழ் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் அனைத்து கட்சிகளின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட சர்வகட்சி

06

## இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவராக கௌசல்ய நவரத்ன

### செயலாளராக இசுறு பாலபட்டபெந்தி தெரிவானார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை சங்கத்தின் செயலாளர் பதவிக்கு சட்டத்தரணி இசுறு பாலபட்டபெந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்தது.

இலங்கை சட்டத்தரணிகள்

06

## தேர்தலுக்கு செலவிடும் பணத்தை மக்களது பட்டினியை போக்க செலவிடுங்கள்

### சுயாதீன பொருளாதார ஆய்வாளர்கள் பகிரங்க கோரிக்கை




உள்ளூராட்சி மன்றத்தேர்தல் இடம்பெற்றால் 3 பிரதான கட்சிகளுக்கு மாத்திரம் 72 பில்லியன் ரூபாவை செலவிட நேரிடும். அந்த பணத்தை தற்போதுள்ள நிலைமையில் மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு உபயோகிக்குமாறு கோரி சுயாதீன பொருளாதார ஆய்வாளர்கள் அரசாங்கத்திடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். மக்களின் துயரத்தை கண்டு முதலைக் கண்ணீர் வடிக்கும் அரசியல் கட்சிகள், உண்மையில் மக்களை நேசிப்பதாக இருந்தால் தேர்தலுக்காக செலவிடும் பணத்தை ஏன் அவர்களின் பட்டினியைப் போக்குவதற்காக வழங்கக் கூடாது என்றும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

தேர்தலுக்காக அரசாங்கத்திற்கு

06

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த எந்த சட்ட ரீதியான தடையுமே கிடையாது

### கட்சித்தலைவர்களிடம் தேர்தல் ஆணைக்குழு பணிப்பாளர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு எந்த சட்டபூர்வமான தடையும் கிடையாது என தேர்தல் ஆணைக்குழு நேற்றைய தினம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளது.

நேற்று தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே

06

## மு.கா.வுடன் மீண்டும் இணைந்த ஹிஸ்புல்லாஹ்

### ஓட்டமாவடியில் கலந்துரையாடியபின் முடிவு



**பாசிக்குடா நிருபர்**

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் இணைந்துள்ளதாக, மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். காவத்தமுனை ஓட்டமாவடியிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் (10) இரவு நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைக்

06



இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவினால் சமூக சேவையாளரும் ஊடகத்துறைசார் பிரதிநிதியுமான குமார் நடேசனுக்கு இந்திய அதிஉயர் விருதான 'பிரவாசி பாரதீய சம்மான்' வழங்கப்படுவதையும் அருகில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மைத்திரியின் ஆட்சியிலிருந்த இரு அதிகாரிகளுக்கு சிறை

### உறுதி செய்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னாள் ஆளணி பிரதானியான குசும்தாஸ மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாச திசாநாயக்க ஆகிய இருவருக்கும் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் வழங்கிய சிறைத் தண்டனையை நேற்று உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.

06

## நாமல் MPயுடன் நேரடி உரையாடல்

### கேள்விகளையும் கேட்கலாம்



ஜனவரி 16 ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு பேஸ்புக் மூலம் நேரடியாக கலந்துரையாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது பேஸ்புக்கில் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

06

தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பான

## ஜனாதிபதியுடனான பேச்சு எமக்கு திருப்தி தரவில்லை

### கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் MP

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும் அதில் எந்த முன்னேற்றமும் இதுவரை காணப்படவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர்

06

## முன்னாள் ஜனாதிபதிக்கு வெளிநாடு செல்ல அனுமதி



கோட்டை நீதவான் நீதிமன்று அறிவிப்பு

03

## ரயில் சேவைகளுக்கான புதிய கால அட்டவணை



பெப்ரவரி முதல் அமுலாகுமென அறிவிப்பு

03

பொத்துவில் விஹாரைக்கு சொந்தமான

## கலசம் ஒன்றை 100 கோடிக்கு விற்க முயன்ற இருவர் கைது!

### வீட்டில் பதுங்கியிருந்த வேளை STF அதிரடி



பொத்துவில் விஹாரை ஒன்றுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் கலசம் ஒன்றை 100 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற இருவரை நேற்று (11) பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் அப்பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்தபோது விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

## உலக பொருளாதாரம் மந்த நிலைக்கு அருகில்!

### உலக வங்கி அறிக்கை சுட்டிக்காட்டு



உலகப் பொருளாதாரம் மந்தநிலையில் விழும் அபாயத்திற்கு அருகில் உள்ளது என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்டதை விட இந்த ஆண்டு உலகப் பொருளாதாரம் 1.7%

06

அவமதிப்பு வழக்கு விவகாரம்:

## இம்ரான் கானுக்கு எதிராக பிடியாணை



இம்ரான் கானுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்த பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அடுத்த கட்ட விசாரணையை ஜனவரி 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 2018

06

## மோதரையில் ஏழு மீன்பிடி படகுகள் நேற்று தீக்கிரை



கொழும்பு, முகத்துவாரம்-லெல்லம மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 7 சிறிய மீன்பிடி படகுகள் நேற்று (11) தீக்கிரையாகியுள்ளன. நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த தீ விபத்தில் இரண்டு படகு

06

அதிவேக வீதியில்

## பேருந்து ஓட்டும் பெண்ணின் திறமை



இன்றைய காலக்கட்டத்தில் உலகில் நாளுக்கு நாள் பல்வேறு துறைகளிலும் பெண்கள் தங்களது திறமைகளை வெளிக்காட்டி சாதித்து வருகின்றனர். இந்தநிலையில்

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்




# கண்டி மாவட்டத்தில் 600 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள்;

# துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்படும்

## மத்திய மாகாண ஆளுநர்





**மாவத்தகம தினகரன் நிருபர்**

கண்டி மாவட்டத்தில் 600 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. வேறு பிரதேசங்களில் கடமையாற்றும் 300 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று கண்டி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர்.

ஏனைய மிகுதி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகதுரித கதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே தெரிவித்தார்.கல்வி அமைச்சின் 1000 பாடசாலையின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் ஏழு முஸ்லிம் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன என்றார்.

கண்டி தெல்தோட்டை முஸ்லிம் தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் எம். எல். பைசல் முஹமட் தலைமையில் இடம்பெற்றது.


அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.ஆளுநர் மாணவ, மாணவிகளுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக பிரதேச சபையின் தவிசாளர் வசீர் முக்தார், சிறப்பு விருந்தினர்களாக மௌலவி எம். எஸ். எம். முனீர், கண்டி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. ஆர். எப். அமீன், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் முன்னாள் இணைப்பு அதிகாரி நிஜாம், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர் மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கல்வி அமைச்சின் பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் செயல்படுத்தப்படும் மாணவர் விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் உளவளச் செயற்பாடு நேற்று பசறை கோணங்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது பசறை தேசிய சேமிப்பு வங்கியால் மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கும் ஆரம்பிக்கப்பட்டன.
படம் லுணுகல நிருபர்

# நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் வீதியின் வடிகானிலிருந்து துர்நாற்றம்



நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான வீதியின் இருபுறங்களிலும் உள்ள வடிகானிலிருந்து வரும் துர்நாற்றத்தினால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். தொடர்ச்சியாக இவ்வாறு துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் நுகர்வோர், பாதசாரிகள், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் உள்ளிட்டவர்களும் சுகாதார ரீதியிலான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாதாந்த கிளினிக்குக்கு வருபவர்களும் குறித்த பாதை ஓரத்தில் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலையில், இத்துர்நாற்றம் அவர்களுக்கு வேறு நோய்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே, நாவலபிட்டி வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியின் வடிகான்களை சுத்தப்படுத்தி தருமாறு பொதுமக்கள் நகரசபை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# டிக்கோயாவில் கணித முகாம்

**ஹற்றன் விசேட நிருபர்**

மாணவர்கள் மத்தியில் கணித அறிவினை விருத்தி செய்யும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட கணித முகாம் ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட டிக்கோயா நுண்கலைக் கல்லூரியில் நேற்று பாடசாலை அதிபர் மூவேந்தன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த கணித முகாமில் தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு கோணங்கள் அமைப்பு, புள்ளிவிபரவியல்,பொது அறிவு , கணித உபகரணங்கள் தயாரித்தல்,திண்மங்கள் உள்ளிட்ட விடயங்களை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் இந்த முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.இதன் போது வித்தியாலயத்தில் நவீன உபகரணங்களுடன் புனரமைக்கப்பட்ட ஆங்கில கற்றல் பிரிவும் திறந்து வைக்கப்பட்டது.

# ஹற்றன் பஸ் தரிப்பிடத்தில் குப்பை கூளங்கள்

மத்திய மலைநாட்டில் உள்ள புகழ்பெற்ற நகரங்களில் ஒன்றான ஹற்றன் பிரதான நகரில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் பாரிய அளவில் கழிவுகள் நிறைந்தும் ,கழிவு நீர் கசிவதால் பிரதான நகரம் சுகாதார சீர்கேட்டில் பாதிக்கப்பட்டு வருவதா மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதான பேருந்து தரிப்பிடத்தில் அதிகமான இடங்களில் கழிவு நீர் தேங்கி இருப்பதாகவும், ஹற்றன் பிரதான நகரில் வர்த்தக நிலையங்களில் அழுகிய உணவுப் பொருட்கள், மாமிசங்கள், பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருட்கள் பேருந்து தரிப்பிடத்தினுள் சிதறிக்கிடப்பதனால் துர்நாற்றத்தால் மக்கள் அருவருப்படைவதை காண முடிகிறது.

அதிகமான இடங்களில் குப்பைகள் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றமையால் நாய்கள், பறவைகள் நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதை, பிரதான பாதை அலங்கோலமாகக் காட்சி தருகின்றது. அதுமட்டுமன்றி ஈக்களின் பெருக்கமும், நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது.

அதேவேளை இரவு வேளைகளில் இந்தக் குப்பைகளை நாடி மிருகங்கள் அதிகமாக வருகின்றமையால் இரவு வேளையில் இப்பகுதியில் பயணிப்பவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். எனவே குறித்த பகுதிக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள், நகரசபை அதிகாரிகள் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.






# முன்பள்ளி பாடசாலைகளின் வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்



**லெட்சுமனார் சஞ்சய்**

பிள்ளைகளின் கல்வியில் முதல் படியாக காணப்படும் முன்பள்ளி பாடசாலைகளின் வளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

பதுளை கனவரல்ல முன்பள்ளி பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துக்கொண்ட போதே இவ் விடயத்தை சுட்டிக்காட்டினார்

.இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,.

அத்திவாரம் முறையாக காணப்பட்டாலே முடிவு உறுதியாக காணப்படும்.அதுபோல பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய முன்பள்ளி பாடசாலை வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டார். மேலும் மலையக மக்கள் முன்னணி தலைவர் இராதாகிருஷ்ணன் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு சென்றுள்ளதாகவும் விரைவில் எவ்வித குறைபாடுகளு மற்ற முன்பள்ளி பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கனவரல்ல தோட்ட நலன்புரி உத்தியோகத்தர்,முன்பள்ளி ஆசிரியர்கள்,பெற்றோர்கள், மாணவர்களென பலரும் கலந்துக் கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

# காணி பெற்று தருவதாக பெண்ணிடம் தங்க ஆபரணங்கள் அபகரிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பிரதேச செயலகத்தின் மூலம் காணி பெற்று தருவதாக பெண் ஒருவருக்கு போலியான விண்ணபப்பபடிவத்தை கொடுத்து அவளின் நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று பலாங்கொடை நகரில் நடைபெற்றுள்ளது.

பலாங்கொடையில் இப் பெண்ணிடம் காணியில்லாத வறிய குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தின் மூலம் காணி பெற்று தருவதாகவும் அதற்காக தம் வசம் விண்ணப்பப்படிவம் இருப்பதாக இருவர் கூறியுள்ளனர்.

அதனையடுத்து அந்தப் பெண் தமக்கும் விண்ணபப்பப்படிவம் ஒன்றை வழங்குமாறு வேண்டியுள்ளார். அந்த நபர் விண்ணபப்பப்படிவத்தை பெண்ணிடம் கொடுத்து அதனை போட்டோ பிரதி எடுத்து வருமாறும் பிரதி எடுக்க செல்லும்போது தங்க ஆபரணங்களை அணிந்து செல்ல வேண்டாம் எனவும் வறுமை நிலையை காட்டுமாறு வேண்டியுள்ளார். இதன் காரணமாக அந்தப் பெண் இதனை நம்பி தங்க நகைகளை கழற்றி மற்ற பெண்ணிடம் கையளித்து போட்டோ பிரதி எடுக்க சென்றுள்ளார். விண்ணப்பப்படிவத்தை போட்டோ பிரதி எடுத்து வந்து பார்க்கும் பொழுது அந்த நபரும் பெண்ணும் தங்க நகைகளுடன் தலைமறைவாகியுள்ளமை தெரியவந்துள்ளது. உடனடியாக இது சம்பந்தமாக அந்த பெண் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மோட்டார் சைக்கிளில் சென்றவர் மீது துப்பாக்கிச் சூடு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 50 வயதான குடும்பஸ்தர் ஒருவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் அவர் ஸ்தலத்திலேயே பலியான சம்பவம் ஒன்று எம்பிலிப்பிட்டிய பனாமுர பிரதேசத்தில் நேற்று முன்திம் இடம்பெற்றுள்ளது.

தனது மகளின் விடயமாக அவரது பாடசாலைக்கு சென்று மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கையில் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு நீண்ட தூரம் இவர் இழுத்து செல்லப்பட்டு புதர்களுக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர்பில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முட்டை வாங்குவதை தவிர்த்த கண்டி மக்கள்

மக்களுக்கு குறைந்த விலையில் முட்டையை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கண்டியில் நடவடிக்கை ஒன்று முன்னெக்கப்பட்டதுடன், இதன்போது கண்டி மக்கள் முட்டை வாங்குவதற்கு பெரிதாக முன்வரவில்லை.

அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கமைய நாடு முழுவதும் முட்டை விநியோகிக்கும் நடவடிக்கைக்கு அமைய (9) கண்டியிலும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது இது தொடர்பான அறி வித்தல் பொதுமக்களுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்த போதிலும் கண்டி மக்கள் முட்டை கொள்வனவில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை.


(9) பகல் 1 மணியளவில் குளியாப்பிட்டியிலிருந்து 15,000 முட்டைகளுடன் லொறியொன்று வந்ததது டன், இந்த லொறி மத்திய வர்த்தக சந்தைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது.





அரநாயக்க வில்பொல பகுதி பெண்களின் நலனுக்காக 'மகளிர் சங்கமொன்றை அங்குராப்பணம் செய்யும் நிகழ்வொன்று, வில்பொல அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அரநாயக்க மகளிர் சங்க அதிகாரி கே.எம். சாமரி கன்னங்கர, போஷாக்கு திட்டமிடல் அதிகாரி சான்த பண்டார, கிராம அபிவிருத்தி அதிகாரி எம். மிஹிரி ஆரியவசம், அரநாயக்க மகளிர் பொறுப்பு அதிகாரி கமனி சித்ரா ஆகியோரின் பங்குபற்றலோடு நடைபெற்ற இந்நிகழ்வில் பாரா தாஹிர் தலைவியாகவும், எம். எஸ். எஸ். சியாமா உப தலைவியாகவும், ஏ. எஸ். அஸ்மா செயலாளராகவும் சுசீலா தமயன்தி உப செயலாளராகவும் எம். வை. எப். ரிஸ்னா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு ஆறு பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# வைத்திய அதிகாரியின் பங்களாவுக்கு அருகில் சிறுத்தை



மலையகத்தைப் பொறுத்தவரையில் சிறுத்தைகளின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

வீடுகளை நோக்கி வரும் சிறுத்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.அண்மையில் வீட்டுக்கு வந்த சிறுத்தைகளின் சீ.சீ.ரி.வி காணொளியும் வெளியிடப்பட்டிருந்தது.இதனால் மக்கள் பேரச்சத்துடன் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியின் பங்களாவுக்கு அருகில் தேயிலைச் செடிகளுக்குள் மறைந்திருந்து எட்டிப்பார்க்கும் சிறுத்தை தொடர்பிலான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைராகியுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஜனவரி 12 வியாழக்கிழமை



தொழுகை நேரம்
சுபஹ் 05.05
லுஹர் 12.20
அஸர் 03.41
மஃரிப் 06.11
இஷா 07.26

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 28
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

நாட்டின் பொருளாதார மீட்சி, ஸ்திரப்படுத்தல்

# வெளிநாட்டு தூதர்களுக்கு அமைச்சர்கள் குழு விளக்கம்



இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை, மீட்சி மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டம் குறித்து அரசாங்கம் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பான கூட்டம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நடைபெற்றது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தனர்.

# ஜப்பான் ஒட்டோ மொபைல் துறையில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு

ஜப்பானிய தூதுக்குழுவுடன் அமைச்சர் மனுஷ நாணயக்கார பேச்சுவார்த்தை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையர்களுக்கு ஜப்பான் ஒட்டோ மொபைல் துறையில் அதிக வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்காக ஒட்டோ மொபைல் பயிற்சி மத்திய நிலையமொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த மத்திய நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு நேரடியாக ஜப்பானில் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய இராஜதந்திர பிரதிநிதிகள் குழுவொன்று தம்மை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன் அது தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அமைச்சரவை செயலக இராஜாங்க அமைச்சர் *Fujimaru Satoshi*, தேசிய பொருளாதார மேம்பாடு தொடர்பான முன்னாள் இராஜாங்க அமைச்சர் *Yamamoto Kozo* ஆகியோர் தலைமையிலான ஜப்பானிய தூதுக்குழுவொன்று நேற்றைய தினம் தொழிலமைச்சில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அந்த சந்தர்ப்பத்திலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

ஒட்டோ மொபைல் துறையில் வேலை வாய்ப்பை இலக்காகக் கொண்ட இந்த தொழிற்பயிற்சி மத்திய நிலையம்

06

மைத்திரி, டலஸ், விமல் உள்ளிட்ட 35 பேருடன்

# சுதந்திர மக்கள் கூட்டணி நேற்று அங்குரார்ப்பணம்



(படம்: ருக்மல் கமகே)

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் பத்து குழுக்கள் இணைந்து சுதந்திர மக்கள் கூட்டணி என்ற பெயரில் அரசியல் கூட்டணியொன்று நேற்று (11) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அந்தக் கூட்டணியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச உள்ளிட்ட 35 எம்.பிக்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, உத்தர லங்கா சபை உள்ளிட்ட கட்சிகளுடன் 10 குழுக்களும் இணைந்து இந்தக்கூட்டணியை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரயில் சேவைகளுக்கான புதிய கால அட்டவணை

*பெப்ரவரி முதல் அமுலாகுமென அறிவிப்பு*

அடுத்த மாத ஆரம்பத்தில் நிலவக் கூடிய பயணிகளின் அளவுக்கு ஏற்ப ரயில் சேவைகளுக்கான புதிய கால அட்டவணையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் விவகார அமைச்சின் ஆலோசனை சபை அறிவித்துள்ளது.

பணியாளர்கள் ஓய்வுப் பெற்று செல்கின்றமை காரணமாக ரத்தாகக் கூடிய ரயில் சேவைகளை மீளமைப்பதற்கான பணிகளை இந்த மாத இறுதிக்குள் தயார்படுத்தவுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருட இறுதியில் 10 ரயில் ஓட்டுநர்கள் மட்டுமே ஓய்வு பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அதிகளவான உல்லாசப் பயணிகள் வருகை தருவதனால் எரிபொருள் விநியோகத்திற்காக அண்மைய நாட்களில் அதிகமான ரயில்களை ஈடுபடுத்த வேண்டியுள்ளதாகவும், இதனால் பயணிகள் ரயில் சேவைகளை ஓரளவு குறைக்க வேண்டியுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதிக்கு வெளிநாடு செல்ல அனுமதி

கோட்டை நீதவான் நீதிமன்று அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, கோட்டை நீதவான் நீதிமன்றம் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு, காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மஹிந்தவுக்கு வெளிநாடு செல்ல அனுமதிகோரி அவரது சட்டத்தரணியினால் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

அதனை, கருத்திற்கொண்டு எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான 10 நாட்களுக்கு முன்னாள்ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதியை கோட்டை நீதவான் திலின கமகே வழங்கியுள்ளார்.

# சிறுவர் மத்தியில் டெங்கு தீவிரமாக பரவும் அபாயம்

டொக்டர் தீபால் பெரேரா எச்சரிக்கை



குழந்தைகள், சிறுவர் மத்தியில் டெங்கு நோய் அதிகளவில் பரவும் போக்கு காணப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 40 சிறுவர்கள் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், 8 பேரின்

06

தரம் 05 புலமைப்பரிசில்

# பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத்திற்குள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணி தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

எனவே, இன்னும் இரு நாட்களில் அந்த பணிகளை நிறைவுசெய்ய முடியும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 334,698 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

ஓய்வூதிய கொடுப்பனவு

## நேற்று முதல் வங்கிக் கிளைகளுக்கு அனுப்பி வைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இம்மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நேற்று வழங்கப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில், இந்த மாதத்திற்கான ஓய்வூதிய கொடுப்பனவு நேற்றைய தினம் வங்கிக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். திறைசேரியில் நிலவும்

06




அதிகரித்த வரி திருத்தத்தை நீக்கக்கோரி

# 15,000 வைத்தியர்களின் கையொப்பத்துடன் மனு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரி திருத்தத்தை நீக்குமாறு கோரி 15,000 க்கும் அதிகமான வைத்தியர்களின் கையொப்பத்துடன் மனுவொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த மனுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதற்காக நேற்றைய தினம் அது ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்

06



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை பாலேந்திராவின் "அரங்கக் கட்டுரைகள் "நூல் அறிமுக விழா இடம் பெற்றது. அவுஸ்திரேலியா பாரதி பள்ளி அதிபர் மாவை நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சிவ சேகரம், கொழும்பு தமிழ்ச்சங்க தலைவர் சட்டத்தரணி என். காண்டீபன், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதர்சிங் ஆகியோர் சிறப்புப் பிரதிகள் பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 28ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீ
மன்றில் பழிப்பார் தொடர்பு

தனியாகச் சிந்திக்கும் போத இனிமையாகப் பழகிவிட்டுப் பொதுமன்றத்தில் பழித்துப் பேசுபவரின் நட்பு தம்மை அணுகாமல் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

# இந்திய வம்சாவளியினர் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவது அவசியம்

மலையகப் பெருந்தோட்டப் பிரதேசங்களுக்கு இந்திய வம்சாவளி மக்கள் அழைத்து வரப்பட்டு 200 வருடங்களாகின்றன. இந்நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகி இருந்த காலப்பகுதியில் இம்மக்களின் மூதாதையர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அதாவது இந்நாட்டின் பெருந்தோட்டங்களில் பணியாற்றுவதற்காக தென்னிந்தியாவில் இருந்து அம்மக்கள் அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து தற்போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பொருட்டு விஷேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம்பெற்றுள்ள இக்கலந்துரையாடலில், மலையக பெருந்தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் போது மலையகப் பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பெருந்தோட்டக் கைத்தொழில் துறையைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள மலையக அரசியல் தலைவர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், தொழிலாளர்களுக்கென பல சட்ட ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ள போதிலும் பெருந்தோட்ட மக்களுக்கு அவற்றை நடைமுறைப் படுத்தும் வாய்ப்பு மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு தொழில் திணைக்களங்களில் பெருந்தோட்ட மக்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படாதுள்ளமை குறித்தும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்நாட்டு மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்திய வம்சாளியினரின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்கள் இந்நாட்டு பிரஜைகளாவர். அவர்கள் இந்நாட்டு குடிகளே அன்றி வேறில்லை. அதனால் இந்நாட்டின் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த மக்கள் அனுபவிக்கும் உரிமைகளையும் வசதிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து உரிமை இவர்களுக்கும் உள்ளது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அந்த வகையில் இந்நாட்டின் சட்டங்கள் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை. அதில் ஏற்றத்தாழ்வுகள் காட்டப்பட முடியாது. அப்படி இருக்கையில், தொழிலாளர்களுக்கென பல சட்டங்கள் நடைமுறையில் உள்ள போதிலும், சில சட்டங்களை மலையகப் பெருந்தோட்ட மக்களுக்காக நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவுகள் நிலவுவதாக இக்கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டிருப்பது குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதற்கான பொறுப்பும் கடமையும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உள்ளது. தவறும் பட்சத்தில் நாட்டின் சட்டங்கள் ஏற்றத்தாழ்வுகளுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டைக் கூட தோற்றுவித்து விடலாம். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது.

அதேநேரம் மலையக் பெருந்தோட்ட மக்களுக்கு தொழில் திணைக்களங்களில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இந்நாட்டு மக்களில் ஒரு பிரிவினராக விளங்கும் மலையகப் பெருந்தோட்ட மக்களின் மூதாதையினர் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டது முதல் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காகவே அயராது உழைத்து வருகின்றனர். இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றான பெருந்தோட்ட துறையில் இவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அந்த மக்கள் பெருந்தோட்டங்களில் வியர்வை சிந்தி உழைத்து அதற்கே உரமாகிச் செல்கின்றனர்.

இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்பை நல்கி வரும் இம்மக்களை மாற்றந்தாய் மனப்பான்மையுடன் நோக்கப்படுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாததாகும். அந்த மக்கள் பொருளாதார மேம்பாட்டுக்கு அளித்துவரும் பங்களிப்புக்கு உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட வேண்டிய தேவை காணப்படும் சூழலில், அம்மக்கள் மீதான மாற்றந்தாய் மனப்பான்மையுடனான பார்வை முற்றாக நீக்கப்பட வேண்டும். அது தவிர்க்க முடியாதது.

அந்த வகையில் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையிலான கலந்துரையாடலில் இவ்விடயங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதன் ஊடாக எதிர்காலத்தில் இவ்வாறான பார்வையும் குறைபாடுகளும் நீங்கும் என்ற நம்பிக்கை மலையக மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் மலையக மக்களும் ஒரு பிரிவினர் என்ற பார்வையும் நோக்கும் அனைத்து தரப்பிலும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலக்கியப் பயணத்தில் 26ஆம் ஆண்டில் 'இனிய நந்தவனம்'

## திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் சிறப்பான விழா

தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளயிலிருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' மாத சஞ்சிகையின் 26 ஆம் ஆண்டு விழா 08.01.2023 அன்று திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வி.ஜி.பி நிறுவனங்களின் துணைத்தலைவர் இரா.தங்கையா தலைமையில் திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க அமைச்சர் (பொறுப்பு) பெ.உதயகுமார் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வி. திருவள்ளுவன், இலங்கையிலிருந்து இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் தினகரன், வாரமஞ்சரி வாரவெளியீடுகளின் பிரதம ஆசிரியர் .தே.செந்தில்வேலவர், பத்மஸ்ரீ எஸ்.தாமோதரன், சேலம் தாரை குழுமங்களின் மேலாண்மை இயக்குநர் அ.குமரவேலு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் தனது சிறப்புரையில், "புத்தக வாசிப்புதான் வாழ்க்கையை மேம்படுத்துகிறது. புத்ததகமே நம்மைப் புரட்டிப்போடும் மொழியை சிறப்பாக கையாள வழிவகுக்கின்றது. வாசிப்பு அவசியமானது. இன்று அச்சு ஊடகங்களுக்கு சவாலான காலம் என்றாலும் அச்சில் வரும் புத்தகங்களை வாசிப்பது அவசியமாகும். தமிழ்மொழியை மேம்படுத்துவதற்கான பணியை 'இனிய நந்தவனம்' ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அர்ப்பணிப்போடு செய்து வருகிறார்.

இந்த இனிய நந்தவனத்தில் தமிழ் மொழி மேம்பாட்டுக்கான அனைத்துக் கட்டுரைகளையும் வெளியிட்டு உலகத் தமிழர்களுக்கு தமிழ் உணர்வை ஊட்டி வருகிறார். தமிழ்மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்று தமிழைப் போற்றி வருபவர்கள் அத்தனை பேரும், இது போன்ற விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய மொழியை பாதுகாக்க முடியும், மேம்படுத்த முடியும். நம்முடைய மொழியை சரியான முறையில் உச்சரிக்க வேண்டும், அதைக் கையாளத் தெரிய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.





மேலும் இவ்விழாவில் இனிய நந்தவனம் 26ஆம் ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. கனடா உதயன் வெளியீடான முனைவர் வே.சங்கரநாராயணன் எழுதிய 'பனிபொழியும் தேசத்தில் பத்து நாட்கள்' என்ற நூலும் இனிய நந்தவனம் பதிப்பக வெளியீடான குழந்தைவேலு நித்தியானந்தன் எழுதிய 'நாங்களும் மனுஷசங்கதான்' என்ற சிறுகதை நூலும் வெளியிடப்பட்டன.

எழுத்தாளரான குழந்தைவேலு நித்தியானந்தன் இலங்கையைச் சேர்ந்தவர். அவர் சென்னையில் வசித்து வருகின்றார். கிறிஸ்தவ மதபோதகரான அவர், உளஆற்றுப்படுத்தல் ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார்.

இந்நிகழ்வின் போது திருச்சி பாட்சா பிரியாணி உரிமையாளர் முகம்மது அபுபக்கர் சித்திக், நொச்சியம் சண்முகநாதன், எழுத்தாளர் கேத்தரீன் ஆரோக்கியசாமி,கவிஞர் தனலெட்சுமி பாஸ்கரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறந்த சுயமுன்னேற்ற நூல்களை எழுதிய மூன்று பேருக்கு நம்பிக்கை நாயகன் விருதும் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டன. புதுக்கோட்டை யோசி பயிற்சி நிறுவனம் வழங்கும் முதல் பரிசை 'உனக்கு நீயே விளக்கு' என்ற நூலுக்கு முனைவர் ஜோ.சலேத்தும், கரூர் சுடர் சமூகநல அறக்கட்டளை வழங்கிய இராண்டாம் பரிசினை 'வெற்றியின் விலாசம்' என்ற நூலுக்கு எம்.கே பாலசுப்பிரமணியனும், நந்தவனம் பவுண்டேசன் வழங்கிய மூன்றம் பரிசினை 'துணிந்து நில் தொடர்ந்து செல்' என்ற நூலுக்கு க. கண்ணநேசனும் பெற்றுக் கொண்டனர்.

'இனியநந்தவனம்' பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். கவிஞர் பா.தென்றல் நோக்க உரையாற்றினார். கவிஞர் சொர்ணபாரதி 26ஆம் ஆண்டு மலர் பற்றி அறிமுக உரையாற்றினார்.

மேற்படி விழாவில் தமிழ்நாடு மற்றும் மலேசியா, இலங்கை, அவுஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த பல்துறை சாதனையாளர்களுக்கு 'வெற்றித் தமிழன்' விருது வழங்கப்பட்டது. நிறைவாக முனைவர் வே.த.யோகநாதன் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

# தினகரன் பத்திரிகை ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரி போட்டிகள்

## 1960 களில் வடக்கு மக்களைக் கவர்ந்த தமிழரின் வீரவிளையாட்டு

தினகரன் பத்திரிகை நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டி சவாரி 1960களின் பிற்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் தைப்பொங்கல் பண்டிகைக் காலத்தில் சிறப்பாக நடைபெற்று வந்ததுள்ளதை பலரும் அறிவர். பின்னர் போர்க் கால சூழ்நிலைமைகளால் யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டிச் சவாரி தடைப்பட்டுப் போனது.

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்வதற்கமைய தைப்பொங்கல் தினமே தமிழரின் புத்தாண்டு என்றும் கூறுவர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் ஆகும். அன்றைய தினம் உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப் படைப்பது தமிழர் மரபு.

தை பிறந்த பின்னரே உழவரின் வாழ்வும் சிறப்படையும். உழவர்களின் வாழ்வியல் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டே மாட்டு வண்டிச் சவாரியாகும். இலங்கையில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது.

மாட்டு வண்டிச் சவாரி ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

காலங்காலமாக இலங்கையில் மாட்டுவண்டிச் சவாரியானது பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்ததுள்ளது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் தைப்பொங்கல் மற்றும் சித்திரைப் புத்தாண்டு நாட்களில் மிகச் சிறப்பாக தினகரன் பத்திரிகையின் சிறப்பு மாட்டு வண்டி சவாரி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்று வந்ததை நாம் சிறுவர்களாக இருக்கையில் கண்டு களித்துள்ளோம்.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங் காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது.

சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தினகரன் பத்திரிகை நிறுவனமானது போருக்கு முன்னைய காலப்பகுதியில் வருடாவருடம் யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் சவாரிப் போட்டி நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

இந்தப் போட்டியின்போது பங்குபற்றும் அனைவரையும் ஊக்குவிக்கும் நோக்கில் தினகரன் பத்திரிகை நிறுவனமானது துவிச்சக்கர வண்டிகளை வழங்கிக் கௌரவிப்பது வழமை.

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம்.

அக்காலப் பகுதிகளில் யாழ்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர்.

### சவாரித்தம்பர் இளையதம்பியின் ஆளுமை:

வருடா வருடம் தினகரன் மாட்டு வண்டி சவாரி நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருவதை யாழ்ப்பாண மக்கள் பலரும் கண்டு களித்து வந்துள்ளனர். இந்த நிகழ்வை முன்னின்று நடத்துவது சுன்னாகத்தை சேர்ந்த பிரபல மாட்டு வண்டி ஓட்டுநரான 'சவாரித் தம்பர்' என அழைக்கப்படும் மறைந்த இ.இளையதம்பி என்பவரேயாவார்.

இவர் இலங்கை அரசாங்க மரக்கூட்டுத்தாபன அதிகாரியாக இருந்த போதிலும் சமூக சமுதாயப்பற்றுடன் தனது முழுமையான பங்களிப்பை தமிழ் மக்களுக்கு ஆற்றி வந்திருந்தார். இவருடைய பங்களிப்பு ஈழத்து மாட்டுவண்டிச் சவாரி வரலாற்றில் மிகப் பெரியது என்றே கணிப்பிடலாம்.

'தினகரன்' பத்திரிகை நடத்திய மாட்டு வண்டிச் சவாரி விழா யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டு காலத்திலும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது.

அக்காலங்களில் பல்வேறு இடங்களிலும் இருந்து மாட்டு வண்டிகள் இவ்விழாவில் கலந்து கொள்ளும். ஆயினும் முக்கியமாக சுன்னாகம், சூராவத்தை, கொற்றாவத்தை, பண்டத்தரிப்பு மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சியில் இருந்தும் மாட்டு வண்டிகள் இவ்விழாவில் பங்கேற்றுக் கொள்ளும்.

மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப் போகின்றது என்றால், அது அனைவருக்கும் பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இந்தப் போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

'தினகரன்' மாட்டு வண்டிச் சவாரி விழாவை சிறப்பாக முன்னின்று நடத்தும் சவாரித்தம்பர் என்று அழைக்கப்படும் இளையதம்பி ஆற்றிய சேவை பலருக்குத் தெரியாமல் இருந்து வந்துள்ளது. தனது சிறப்பான பணியை மாட்டு வண்டி பாரம்பரியத்திற்காக ஆற்றியுள்ளார்.

அவருடைய பணியைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டிய காலம் எனக்கு இருந்த போதும், அவருடைய சேவைகளை பற்றிய தகவல்களும், பதிவுகள் எல்லாம் போர்க்காலத்தில் அழிந்து விட்டன. சுன்னாகத்தில் இருந்து அவர் ஆற்றிய பணியை நாங்கள் எப்போதுமே மறந்து விட முடியாது.

அத்துடன் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் மறைந்த இ. சிவகுருநாதன் அவர்களும் இவ்விழாக்களில் கலந்து கொண்டு பல்வேறு வகையிலும் தனது பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

'தினகரன்' நடத்திய மாட்டு வண்டிச் சவாரி யாழ். முற்றவெளியில் நடக்கும்போது பெருந்திரளான மக்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து வந்து பார்த்து ரசிப்பார்கள். அக்காலங்களில் 1960களிலும் 70களிலும் யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பான விழாக்களாக மாட்டு வண்டிச் சவாரியே முதன்மை வகித்தது.




## மாட்டுவண்டிச் சவாரி பாரம்பரியத்தைக் கட்டிக்காத்த சவாரித்தம்பர் இளையதம்பி என்றுமே நினைவு கூரப்பட வேண்டியவர்

### முன்னோடியாக இருந்த சவாரித்தம்பர்:

இப்போது நடைபெற்று வரும் மாட்டு வண்டி சவாரி நிகழ்வுகளுக்கு முன்னோடியாக இருந்த 'சவாரித்தம்பர் இளையதம்பி' 1991 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இலங்கையில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டிச் சவாரியில் அவரின் பங்கு அளப்பரியது.

மாட்டு வண்டிச் சவாரியானது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது. பாரம்பரிய தமிழர் கலாசாரத்தை பேணிப் பாதுகாத்ததில் சுன்னாகம் 'சவாரித்தம்பர் இளையதம்பி' அவர்களும் தனது அளப்பரிய பங்களிப்பை ஆற்றியுள்ளார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# ராகுல் காந்திக்கு எச்சரிக்கை விடுத்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பு!


இந்திய ஆர்.எஸ்.எஸ்காரர்களை காக்கி 'ட்ரவுசர் போட்ட கௌரவர்கள்' என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கூறியதற்கு ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தரக்குறைவாக விமர்சிப்பதை இத்து டன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஒரு விஷயம் குறித்து முழுமையாகத் தெரியாமல் இதுபோல உளறுவதால்தான் இன்னும் ராகுல் காந்தி பப்புவாக சுற்றித் திரிகிறார் என்றும் மனோகர் லால் கட்டார் விமர்சித்தார்.

சமீபகாலமாக, ஆர்.எஸ்.எஸ் அமைப்பை ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்து வருகிறார். சில மாதங்களுக்கு முன்பு கூட ஆர்.எஸ்.எஸ் நிறுவனர்களின் ஒருவரான சாவர்க்கரை அவர் விமர்சித்தது அரசியல் களத்தில் புயலை ஏற்படுத்தியது. இந்தச் சூழலில், ஹரியானாவில் நடைப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் ராகுல் காந்தி, மீண்டும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தாக்கினார்.

ராகுல் காந்தியின் இந்தப் பேச்சுக்கு ஹரியானா முதல்வரும், பா.ஜ.க மூத்த தலைவருமான மனோகர் லால் கட்டார் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து பேசிய அவர், "ஆர்.எஸ்.எஸ் குறித்து தொடர்ச்சியாக ராகுல் காந்தி தரக்குறைவான முறையில் பேசி வருகிறார். அவருக்கு ஆர்.எஸ்.எஸ் அமைப்பு குறித்து என்ன தெரியும்? இன்று இந்தியா இருப்பதற்கு காரணமே ஆர்.எஸ்.எஸ்தான்.

ஆர்.எஸ்.எஸ் பற்றி தெரியவில்லை என்றால் ஆர்.எஸ்.எஸ் பயிற்சி முகாம்களில் ராகுல் காந்தி பங்கேற்க வேண்டும். அதன் பிறகு கருத்துத் தெரிவிக்க வேண்டும். ஒரு விஷயத்தை பற்றி முழுமையாக தெரியாமல் உளறக் கூடாது. அப்படி உளறுவதால்தான் அவர் இன்னும் பப்புவாகவே நாட்டில் உலவி வருகிறார். ஆர்.எஸ்.எஸ் குறித்து இனியும் தேவையில்லாமல் பேசி சீண்டி பார்க்க வேண்டாம்" என எச்சரித்தார்.



# சென்னையில் மார்ச் 10ஆம் திகதி இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 75 ஆம் வருட பவளவிழா மாநாடு



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை பங்கேற்குமாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையிலான குழுவினர் நேரில் சந்தித்து வேண்டுகோள்; புதுடில்லில் நிறைவுவிழா

**சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் தமிழக முதலமைச்சரும் தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை கடந்த 10.01 2023 ஆம் திகதியன்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.**

இக்குழுவில் கேரள மாநிலத் தலைவர் சாதிக் அலி ஷிகாப் தங்கள்,தேசிய பொதுச் செயலாளரும், கேரளா சட்டமன்ற எதிர்க் கட்சி துணைத் தலைவருமான பி.கே. குஞ்சாலிகுட்டி, பாராளுமன்ற உறுப்பினர்கள் இ.டி. பஷீர், அப்துல் வஹாப், அப்துல் சமது சமதாணி, கே. நவாஸ் கனி,

மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில இளைஞர் அணி பொதுச்செயலாளர் எஸ்.அன்சாரி மதார், ஊடகவியலாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இச்சந்திப்பின் பின்னர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசியர் கே.எம்.காதர்மொகிதீன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் 75 ஆவது ஆண்டு பவளவிழா எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. சென்னையில் தொடக்கவிழா நடத்தவுள்ளோம்.

சென்னையில் நடைபெறும் தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொள்ள வேண்டுகோள் வேண்டுகோள் விடுத்தோம். அவர் கலந்து கொள்வதாக சம்மதம் தெரிவித்தார். மாநாடு சென்னை கொட்டிவாக்கம் ராஜீவ்காந்தி சாலையில் (ஓ.எம்.ஆர். சாலை) மாலை 4 மணி முதல் நடைபெறுகிறது.

அதற்கு முன்னதாக காலை மணியளவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடங்கிய இடமான ராஜாஜி ஹோலில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.இதனைத் தொடர்ந்து பவளவிழா ஒவ்வொரு மாநிலத்திலும் ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது. 2024 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி புதுடில்லியில் பவளவிழாவின் நிறைவுவிழா நடைபெறுகிறது. இவ்விழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அகில இந்திய தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தோம். அவர் பங்கேற்பதாகத் தெரிவித்தார். அவருக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அகில இந்திய தலைவர்கள் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கெண்டோம். தமிழகத்தில் அவர் தலைமையிலான நல்லாட்சி தொடரவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டோம்."

இவ்வாறு அவர் கூறினார்.

திருச்சி
**எம்.கே.ஷாகுல் ஹமீது...**

# 'FACETS SRI LANKA' இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி வியாபாரிகளும் பங்கேற்பு

**இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சி 'FACETS Sri Lanka' கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி திங்கட் கிழமை முடிவடைந்தது. சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இக் கண்காட்சியில் பெருந்திரளான உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க வியாபாரிகள் கலந்து கொண்டனர்.**

இம்மாதம் 07ஆம் திகதி ஆரம்பமான இக் கண்காட்சியை கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இறுதித் தினமான கடந்த திங்கட்கிழமை கண்காட்சியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எரான் விக்ரமரத்ன,ஹர்ஷ டி. சில்வா மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் வருகை தந்திருந்தனர்.





மேற்படி கண்காட்சி பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று கொழும்பு 4, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள 'Beauty Gems' உரிமையாளரும் பிரபல இரத்தினக்கல் வியாபாரியுமான எம்.இசட்.எம். அஹ்ஸர் கருத்துத் தெரிவித்தார். 60 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு முன்னணி வியாபாரிகள் அங்கு கலந்து கொண்டனர்.

உலகில் சிறந்த மாணிக்க வியாபாரிகளைக் கொண்ட சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பாங்கொக், ஜப்பான், ஹொங்கொங், அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து பலர் வருகை தந்து இக்கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அஹ்சர், "Ceylon Sapphire பெறுமதியான இரத்தினக்களை உலகத்துக்கு அறிமுகப்படுத்த எமது வியாபாரிகள் முயற்சி செய்ய வெண்டும். அத்தோடு இதுபோன்ற கண்காட்சிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட வேண்டும்" என கோரிக்கை முன்வைத்தார்.

இக்கண்காட்சியில் பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

**ருஸைக் பாரூக்...**

# தமிழ்நாட்டில் ஆளுநர் ரவிக்கு எதிராக தொடர் போராட்டங்கள்!

**தமிழ்நாட்டில் நேற்று 3 ஆவது நாளாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தாராபுரத்தில் ஆளுநர் ரவியின் உருவபொம்மையை எரிக்க முயன்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியினரை பொலிசார் தடுத்து நிறுத்தினர். மயிலாடுதுறையில் ஆளுநர் ரவிக்கு எதிராக வழக்கறிஞர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

தமிழ்நாடு சட்டசபையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தன்னிச்சையாக உரை நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசு தயாரித்த உரையின் சில பகுதிகளை வாசிக்காமல் தவிர்த்தார். இதற்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினார். இதற்கு அதிருப்தி தெரிவித்து ஆளுநர் ஆர்.என்.ரவி, வெளிநடப்பு செய்தார். இது பெரும் சர்ச்சையானது.





தமிழ்நாட்டுக்கு தமிழகம் என பெயர் மாற்றம் தேவை என்ற அவரது கருத்து மற்றும் தமிழ்நாடு சட்டசபையில் தன்னிச்சையாக உரை வாசித்தமை உள்ளிட்டவைகளால் தமிழ்நாடு முழுவதும் ஆளுநர் ரவிக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. தமிழ்நாட்டின் பல இடங்களில் ஆளுநர் ரவியின் உருவபொம்மையை எரிக்க முயன்றனர். சென்னை முதல் கோவை வரையிலும் புதுச்சேரியிலும் ஆளுநருக்கு எதிராக போராட்டங்கள் கடந்த 2 நாட்களாக நடைபெற்றன.

நேற்று 3 ஆவது நாளாகவும் ஆளுநர் ரவிக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றன. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அண்ணா சிலை முன்பு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என் ரவியின் செயல்பாடுகளை கண்டித்து தாராபுரம் விடுதலை சிறுத்தை கட்சியின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆளுநர் ரவியின் உருவ பொம்மையை எரிக்க சிலர் முயற்சி செய்தனர்.

ஆனால் தாராபுரம் பொலிஸ் துணை கண்காணிப்பாளர் தனராசு தலைமையில் அந்த பொம்மையை அப்புறப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விடுதலை சிறுத்தை கட்சியை சேர்ந்த 15 பேரை கைது செய்தனர்.

ஆதித்தமிழர் பேரவை கட்சி மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர் .என். ரவியை கண்டித்து கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது ஆளுநர் ரவியின் புகைப்படத்தை மாவட்ட தலைவி சாவித்திரி காலணியால் அடித்ததால் சலசலப்பு ஏற்பட்டது. அப்போது அங்கிருந்த பொலிசார் சாவித்ரி உள்ளிட்டோரை கைது செய்தனர். இதேபோல் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஆளுநர் ஆர்.என் ரவியின் செயல்பாடுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மயிலாடுதுறை வழக்கறிஞர் சங்கத் தலைவர் வேலு குபேந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

மேலும் மத்திய அரசு உடனடியாக ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என வழக்கறிஞர்கள் கோஷங்களை எழுப்பினர்.

# 'பெண்களுக்குரிய பணிக்கான சிறந்த இடம்' 'மகளிர் நட்பு பணியிடங்கள்' விருதுகள்

## AIA பெற்றுக் கொண்டது

**பெண்களுக்கான பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதில் AIA மேற்கொண்ட முயற்சிகளுக்காக மற்றொரு விருது வழங்கும் அமைப்பால் அது அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் Satynmag.com மற்றும் CIMA ஸ்ரீலங்காவினால் மீண்டும் ஒருமுறை 'மிகச் சிறந்த மகளிர் நட்பு பணியிடங்களில்' ஒன்றாக பெயரிடப்பட்டது.**

இந்த விருதுகள் குறித்து AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சத்துரி முனவீர கருத்துத் தெரிவிக்கையில், 'எங்கள் பணியாளர்கள் அனைவருக்கும் உண்மையிலேயே பாதுகாப்பான மற்றும் வெகுமதி அளிக்கும் பணியிடமாக இருப்பதற்கு நிலையான அங்கீகாரங்களைப் பெறுவதில் நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். AIA இல் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் ஆதரவளிக்கும் அர்த்தமுள்ள கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல தசாப்தங்களாக பணியிடத்தில் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை வளர்த்து வருகிறோம்.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை ஆதரிப்பதற்காக பல சவால்களை ஏற்று பல பாத்திரங்களை வகிக்கின்றனர். இருப்பினும், பெரும்பாலான பெண்கள் தங்கள் தொழிலின் பொறுப்புகளை பாரம்பரிய பாலின பாத்திரங்கள் மற்றும் வீட்டில் அவர்களுக்குத் தேவையான பொறுப்புகளுடன் சமநிலைப் படுத்துவது சவாலாக உள்ளது. AIA எப்போதும் இந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் பன்முகத் தன்மையை ஊக்குவிக்கும் பணிச்சூழலை உருவாக்குவதை உறுதிசெய்துள்ளது' என குறிப்பிட்டார்.



AIA மனித வளப் பணிப்பாளர் துஷாரி பெரேரா தெரிவிக்கையில், 'நாங்கள் திறமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறுவனமாக இருக்கும் அதேவேளையில், பெண்களை மேம்படுத்துவதிலும், தகுதியின் அடிப்படையில் அவர்களின் தொழில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நிறுவனத்தின் பெண் பணியாளர்கள், கவனமாகக் கையாளப்பட்ட பக்கச்சார்பற்ற தொழில் மேம்பாட்டு செயல்முறையின் மூலம் மூத்த தலைமைப் பாத்திரங்களை ஏற்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்' என்றார்.




அவர் மேலும் குறிப்பிடுகையில் 'கடந்த ஆண்டில், பணியாளர்களில் பெண்களின் சதவீதத்தை 41வீதம் வரை அதிகரித்துள்ளோம். அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் உண்மையாக ஒத்துழைக்கக்கூடிய சூழலை உருவாக்க நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்' எனத் தெரிவித்தார்.

# டெங்கு நோய் தீவிரமடையும் அபாயம் ஒரு வாரத்தில் 2142 நோயாளிகள் பதிவு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் டெங்கு நோய் பரவல் வெகுவாக அதிகரித்து வருவதாகவும் இந்த வருடத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் 2142 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு அதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாதத்தின் கடந்த 2ம் திகதி முதல் 7ம் திகதி வரையான காலப் பகுதி மேற்படி நோயாளர் எண்ணிக்கை பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இக்காலத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் அந்த மாவட்டத்தில் 440 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் 433 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 273 பேரும், கல்முனை பிரதேசத்தில் 174 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 128 பேரும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கு மேலதிகமான களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் நூற்றுக்கு அதிகமான டெங்கு நோயாளர்கள் குறித்த 7 தினங்களுக்குள் இனங்காணப்பட்டதாகவும் அந்த பிரிவு மேலும் தெரிவித்தது.

# கவிஞர் பிரேம்ராஜின் தாயார் திருமதி சிவக்கொழுந்து காலமானார்



இலங்கையில் பௌர்ணமி தோறும் கவியரங்கம் நடாத்திவரும் வலம்புரி கவிதா வட்டத்தின் கவிஞரும் எழுத்தாளருமான பிரேம்ராஜின் தாயார் திருமதி சிவக்கொழுந்து முத்துவேல் கடந்த 2023.01.10ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், இலங்கை துறைமுக கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய முத்துவேலின் மனைவியுமார்.

அன்னாரின் பூதவுடல் இல: 38, லிங்க நகர், திருகோணமலை இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று 12.01.2023ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருகோணமலை இந்து பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. இதனை கவிஞரும் எழுத்தாளருமான பிரேம்ராஜ் (0777323758) தெரிவித்தார்.

# ரயில் வேகன் மூலமான பொருட்கள் போக்குவரத்து; 40 வீத செலவை மீதப்படுத்தலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள் நெருக்கடி காரணமாக நாட்டில் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதை கவனத்திற்கொண்டு ரயில்வே திணைக்களமானது ரயில் மூலமான பொருட்கள் போக்குவரத்தை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தி வருவதாக ரயில்வே அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு ரயில் மூலமான பொருட்கள் போக்குவரத்து மேற்கொள்ளும் போது நடைமுறையிலுள்ள வழமையான செலவுடன் ஒப்பிடுகையில் 40வீதமான நிதியை மீதப்படுத்த வாய்ப்பு ஏற்படுமென்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## கொழும்பு மாநகர சபைக்கு...

தீர்மானித்துள்ளன.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிக வெற்றிவாய்ப்புள்ள மேலும் சில உள்ளூராட்சி சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடவும் தீர்மானித்துள்ளன.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தர லங்கா சபா, சுதந்திர மக்கள் சபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அநுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்ட சுயாதீன குழு ஆகியன இணைந்து உருவாக்கவுள்ள கூட்டணிக்கு ஹெலிகொப்டர் சின்னத்தை தெரிவுசெய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கலசம் ஒன்றை 100 கோடிக்கு...

கைப்பற்றப்பட்ட கலசம் விசேட கல்லினால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்பகுதியில் விலைமதிப்பற்ற கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. கலசத்தின் இருபுறமும் வெண்கல புத்தர் சிலை மற்றும் நீலக்கல் பதிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் மட்டக்களப்பு பிரதேசத்தையும் மற்றைய நபர் வெயங்கொட பிரதேசத்தையும் சேர்ந்தவர்களாவர்.

## மோதரையில் ஏழு மீன்பிடி...

இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி சாதனங்களும் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் முகத்துவாரம் பொலிஸாரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீ விபத்திற்கான காரணம் நேற்று மாலை வரை கண்டறியப்படாத அதேவேளை, இது ஒரு நாசகார செயலா என்பது குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## பேருந்து ஓட்டும் பெண்ணின்...

இலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின பெண் ஒருவர் கொழும்பு அதிவேக வீதியில் பேருந்து ஓட்டுநராக பணியாற்றி வருகின்றமை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பேசப்பட்டு வருகின்றது.

இவர் தனது கடின உழைப்பினால் சாதிக்கவேண்டும் என்ற நோக்கோடு பயணிக்கும் சிங்கப் பெண்ணாக காணப்படுகின்றார். இவருக்கு பல்வேறு தரப்பினரும் தமது பாராட்டுக்களை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

## உலக பொருளாதாரம்...

மட்டுமே வளரும் என் எதிர்பார்ப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உக்ரைன் – ரஷ்யா மோதல் மற்றும் கொரோனா தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து உருவாகும் பல காரணிகளே இதற்கு காரணம் என அறிக்கை தெரிவிக்கின்றது.

உலகளவில் மந்தநிலை ஏற்பட்டால், 1930 களுக்குப் பிறகு ஒரே தசாப்தத்தில் இரண்டு முறை மந்தநிலைகள் பதிவாவது இதுவே முதல் முறை என்றும் உலக வங்கி கூறியுள்ளது.

## கனடா அரசின் செயற்பாடு;...

இலங்கையின் அதிருப்தியை அமைச்சர் அலி சப்ரி வெளிப்படுத்தியுள்ளார்.

மனித உரிமை மீறல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை கனேடிய அரசாங்கத்தினால் பல்வேறு முக்கிய தடைகள் விதிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் கனேடிய உயர்ஸ்தானிகரை , வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு வரவழைத்து அமைச்சர் இலங்கையின் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தமை இந்த முக்கியமான தருணத்தில் பொறுப்பற்ற செயலாகும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, நல்லிணக்கத்தை அடைவதற்காக ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களில் நாடு ஈடுபட்டுள்ள வேளையிலேயே இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் இந்த நடவடிக்கையானது தற்போதைய சந்தர்ப்பத்தில் உதவியற்றதும், இலங்கையிலுள்ள சமூகத்தினரை ஓரங்கட்டுவதைப் போன்ற செயற்பாடுமாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## மலையக, முஸ்லிம் மக்களது...

மாநாட்டின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்களுக்கிணங்க தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக தலையிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளில் பெரும்பாலானவை தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதனையடுத்து, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஜனாதிபதி உடனடியாக ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதும் அதனையடுத்து முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் போது அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்துடன் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடனேயே அதை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தலுக்கு செலவிடும் பணம்...

ஏற்படும் செலவிற்கு மேலதிகமாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மேலதிக செலவை ஏற்க வேண்டும் என பொருளாதார ஆய்வாளர் குழு அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

அக்குழுவினரின் மதிப்பீட்டுக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவருக்கு குறைந்தது 30 இலட்சம் ரூபா செலவிட நேரிடும் எனக் கணிப்பிட்டால் , அரசியல் கட்சிகளின் சார்பில் களமிறங்கும் 8,000 வேட்பாளர்களுக்கு 24 பில்லியன் அதாவது 2,400 கோடி செலவிட நேரிடும்.

அதற்கமைய பிரதான 3 கட்சிகளும் இவ்வாறு 24 பில்லியன் என்ற அடிப்படையில் , 72 பில்லியன் ரூபாவினை தேர்தலுக்காக செலவிட நேரிடும். பிரசுரங்கள் அச்சிடுதல் மற்றும் இதர செலவுகளைக் கணக்கில் கொண்டு ஒரு வேட்பாளருக்கு எந்தளவு பணம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் 50 சதவீதமான செலவுகளை அரசாங்கத்திற்கு ஏற்க நேரிடும் எனத் தெரிவித்துள்ள ஆய்வாளர்கள் , இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முன்னுரிமையை அறிந்து தீர்மானங்களை எடுக்காவிட்டால் முழு நாட்டு மக்களும் அதற்கான இழப்பீட்டை செலுத்த நேரிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு இது தொடர்பில் விளக்கமளித்த இலங்கை பொருளாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் விஜிதபுரே விமலரதன தேரர், சிறுவர் மந்த போசனை, பசி, வறுமை மற்றும் வேலையின்மை அதிகரித்து வரும் வேளையில், அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் சில தியாகங்களைச் செய்து, பொருளாதாரம் என்ற புகையிரதத்தை சரியான பாதையில் பயணிக்கச் செய்ய வேண்டும்.

இந்த தருணத்தில் நாம் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக செயற்பட்டால் நாடு கடந்த யுகத்தை விட மிக மோசமான நிலைக்கு தள்ளப்படலாம் எனவும் விமலரதன தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்பவர்கள் மக்களை ஏமாற்றி மோசடி செய்த பணத்தையே செலவு செய்கின்றனர். தேர்தல் வெற்றியின் பின்னர் இதனை விட பன்மடங்கு இலாபமீட்ட முடியும் என்ற நோக்கத்துடனேயே அவர்கள் இவ்வாறு செலவுகளை செய்கின்றனர்.

மேலும், வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படும் ஒரு கட்சியைச் சுற்றி வர்த்தகர்களும் ஒன்று சேர்வதாக தெரிவித்த விமலரதன தேரர், இலங்கையின் பொருளாதாரம் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அளவிற்கு வலுவாக இல்லை என்பதை அரசாங்கம் உணர வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதியுடனான பேச்சு...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். அந்தவகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பற்கு இதுவரை எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் ஜனாபதியுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை எந்த முன்னேற்றமும் எட்டப்படாமல் நிறைவு பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் இப்போதும் எமது மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி அவற்றில் காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான பிரச்சினை, காணி விடுவித்தல் தொடர்பான பிரச்சினைகளும் உள்ளடங்குகிறது.

இந்த மூன்று விடயங்கள் தொடர்பில் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தினோம்.எனினும் ஏற்கனவே இருந்த நிலைமையே தற்போதும் காணப்படுகிறது. எந்த முன்னேற்றமும் தற்போது கிடையாது.

அதேவேளை தற்போது அரசியலமைப்பில் உள்ள அதிகாரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பில் நாம் வேண்டுகோள் விடுத்தோம். அது தொடர்பிலும் எமக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

ஒரு வாரத்திற்குள் அது தொடர்பில் எமக்கு அறிவிப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குள் அவ்வாறு அறிவிக்கப்பட்டால் நாம் மீண்டும் கூடுவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை சட்டத்தரணிகள் சங்க...

சங்கத்தின் 2023 , 2024 தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் பதவிக்கு சிரேஷ்ட சட்டத்தரணி கௌசல்ய நவரத்னவும் செயலாளர் பதவிக்கு சட்டத்தரணி இசுறு பாலபட்டபெந்தியும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு நேற்று நண்பகல் 12 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. வேறு எந்த வேட்பாளரும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யாத நிலையில் அவர்கள் இருவரும் முறையே தலைவராகவும் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்காக சட்டத் துறையில் பிரபலமானவரான கௌஷல்ய நவரத்னவை ஜனாதிபதி சட்டத்தரணிகளான கலாநிதி கே. கனகேஷ்வரன், கலாநிதி பாயிஸ் முஸ்தபா, கலாநிதி ரொமேஷ் டி சில்வா, இக்ராம் மொஹமட், குஷான் டி அல்விஸ், காலிங்க இந்ரதிஸ்ஸ, சஞ்சீவ ஜெயவர்தன, யூ. ஆர் டி சில்வா, நளிந்த இந்ரதிஸ்ஸ, சந்திக்க ஜெயசுந்தர, ஜகத் விக்ரமநாயக்க மற்றும் ஷிரந்தி குணவர்தன ஆகியோர் பரிந்துரை செய்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக முன்னணி ஜனாதிபதி சட்டத்தரணிகள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளிடம் பயிற்சி பெற்று அனுபவம் பெற்றுள்ள கௌஷல்ய நவரத்ன சட்டத் துறையில் 26 ஆண்டுகளுக்கு மேல் தொழில் அனுபவம் பெற்றுள்ள சிரேஷ்ட சட்டத்தரணியாவார்.

சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன 2019 இல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதோடு சட்டத்தரணிகள் சங்கத்தின் பிராந்திய உப தலைவர் செயற்குழு உறுப்பினர் மற்றும் சட்டத்தரணி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன், கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் மற்றும் கொழும்பு சட்ட சங்கத்தின் தலைவர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

## நாமல் MPயுடன்...

இந்த நேரடி கலந்துரையாடலின் போது தன்னிடம் பொது மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு உடனடியாகவே பதிலளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## இம்ரான் கானுக்கு எதிராக...

ஆம் ஆண்டில் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான் கான் பிரதமராக பதவியேற்றார். அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானம் தோல்வி அடைந்ததையடுத்து அவர் பதவி விலகினார்.தற்போது பாகிஸ்தான் பிரதமராக ஷபாஸ் ஷெரீப் பதவி வகித்து வருகிறார்.

இதற்கிடையே, தேர்தல் ஆணையம் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாக தலைமை தேர்தல் ஆணையர் சிக்கந்தர் சுல்தான் ராஜாவை இம்ரான் கான் தொடர்ந்து விமர்சித்து வந்தார்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்தின் விசாரணைக் குழு இம்ரான் கான் மீது அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. விளக்கம் கேட்டு பல முறை நோட்டீஸ் அனுப்பியும் பதில் இல்லை.

இந்நிலையிலேயே இம்ரான் கானுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்த பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அடுத்த கட்ட விசாரணையை ஜனவரி 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

## மைத்திரியின் ஆட்சியிலிருந்த...

2018ம் ஆண்டு மே மாதம் கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் இயந்திர உபகரணங்கள் ஒப்படைக்கும் நடவடிக்கைகளின் போது இந்திய பிரஜையான வர்த்தகர் ஒருவரிடமிருந்து 54 மில்லியன் ரூபா இலஞ்சமாக கோரப்பட்டு அதிலிருந்து 20 மில்லியனைப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் பேரில் அவர்களுக்கு மேற்படி தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் மேற்படி இருவருக்கும் எதிராக 24 குற்றங்கள் முன்வைக்கப்பட்டு அதன்கீழ் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதியவர்கள் குழாம் முன்னிலையில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ள குசும் தாஸ மகாநாம என்ற பிரதிவாதி மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமினால் 20 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி 65 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

பியதாச திசாநாயக்க என்ற பிரதிவாதிக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனையுடன் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை செலுத்துமாறும் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த எந்த...

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தலை சாத்தியமாக முன்னெடுப்பது தொடர்பில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிமுறைகள் தொடர்பில் நேற்றைய இந்த பேச்சுவார்த்தையின் போது விரிவாக ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தேர்தல் நடைபெறும் காலத்தில் வன்முறைகளை தூண்டும் வகையில் செயல்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அனைத்து கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மு.கா.வுடன் மீண்டும்...

கூறினார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வருகையானது, எமது கட்சிக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்துள்ளதுடன், இதனால் மு.கா. பல மடங்கு வெற்றிகளை ஈட்டுவதற்கு நல்லதொரு ஆரம்பமாக மீண்டும் அமைந்துள்ளது" என்றார்.

அத்துடன், இக்கட்சியை தாய் வீடாகக் கருதுகின்ற எவருக்கும் கதவுகள் திறந்திருக்குமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்,

" மு.கா.வுடன் தானும் கட்சி ஆதாரவாளர்களும் முழுமையாக இணைந்து கொள்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், மு.கா. அனைவருக்கும் தாய் வீடு. ஆகவே, இத்தாய் வீட்டில் தான் மீண்டும் சேர வேண்டுமென்பதில் உறுதியாக இருந்து வந்துள்ளேன்" என்றார்.

"இன்னுமொரு கட்சி தொடங்க வேண்டுமென்று என்னிடம் பலர் கூறினார்கள். அதை நான் அனுமதித்தது கிடையாது. ஏனென்றால், மு.கா. விலிருந்து பிளவு பட்டு புதிய கட்சியை உருவாக்கி முஸ்லிம் சமூகத்தில் பெரிய பிளவை ஏற்படுத்தக் கூடாதென்பதில் நாம் அனைவரும் மிகக் கவனமாக இருக்கின்றோம் " என்றார்.

## ஜப்பான் ஒட்டோ மொபைல்... 03ஆம் பக்கத் தொடர்

அரச மற்றும் தனியார் துறை இணைந்த திட்டமாக ஆரம்பிப்பதற்கு இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த தொழிற்பயிற்சி மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அங்கு பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் நேரடியாக ஜப்பானில் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு உள்ள வாய்ப்புகள் தொடர்பிலும் இதன் போது ஜப்பானிய தூத்துக் குழு தெளிவுபடுத்தியுள்ளது.

எதிர்வரும் சில வருடங்களில் ஜப்பானில் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளில் இருந்து 65 இலட்சம் ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கான தேவை காணப்படுவதாகவும் அந்த செயற்திட்டத்தை நிவர்த்தி செய்வதற்காக இலங்கையர்களின் பங்களிப்பு தொடர்பிலும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக நபர்களை அனுப்பும் எஸ். எஸ். டபிள்யூ வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கும் அதற்காக ஜப்பான் வழங்கக்கூடிய உச்ச அளவு ஒத்துழைப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அந்த தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஜப்பானுக்கு வேலை வாய்ப்புக்காக நபர்களை அனுப்பும் நாடுகளில் இலங்கையை முதல் தர நாடாக ஏற்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார இதன் போது தெரிவித்துள்ளார்.

## சிறுவர் மத்தியில் டெங்கு... 03ஆம் பக்கத் தொடர்

நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே குழந்தைகளுக்கு டெங்கு அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கு அனுப்பி சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பெற்றோரிடம் அவர் விசேட கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நோய் அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகளை பாடசாலைகள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்க்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மிகவும் கடினமான நிலையை அடைந்த பின்னர் வைத்தியசாலையில் சேர்ப்பது மிகவும் ஆபத்தானது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## நேற்று முதல் வங்கிக்... 03ஆம் பக்கத் தொடர்

நிதி நிலைமை காரணமாக இம்முறை உரிய நிதியை வங்கியில் வைப்பில் இடும் நடவடிக்கை சற்று தாமதமாகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்காக அரசாங்கம் மாதாந்தம் 2600 கோடி ரூபாவை செலவிடப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 15,000 வைத்தியர்களின்... 03ஆம் பக்கத் தொடர்

அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மூலம் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய மருத்துவமனைகளின் டாக்டர்களிடம் இந்த கையொப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். தமது வேண்டுகோளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.










*மினுவாங்கொடை கல்லொளுவை நிலாமிய்யா அரபிக் கல்லூரியின் 18 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது பிடிக்கப்பட்ட படங்கள்...*


பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் ஹுன்னஸ்கிரிய அரச தோட்டத்தின் கிராம்பு விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் ஹுன்னஸ்கிரிய அரச தோட்டத்தின் கிராம்பு விளைச்சலை ஆறு மாத காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இந்த கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடங்கலான கேள்வி ஆவணங்களை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலிருந்து 2023-01-13ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-01-20ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கல்பிஹில்ல பிராந்திய அலுவலகத்திலிருந்து 2023-01-13ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-01-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையிலும் 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாக 100,000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் வைப்புச் செய்தல் கட்டாயமாகும்.

அந்த கேள்வி ஆவணங்களை 2023-01-20ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் இலங்கை அரச பெருந்தோட்டத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்கள் பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்வியின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை,**
**கொழும்பு- 10.**
**தொலைபேசி: 0115-921463**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.01.10

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 4996 | ரூ. 12,253,141.00 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P | 2 | 0 | 2 | 8 | 2 | 5 |

**மெகா பவர்**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த மெகா சுப்பர் பரிசு |
|---|---|
| 1344 | ரூ. 292,100,050.00 |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| C | 20 | 20 | 24 | 66 | 71 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 1026 | ரூ. 141,392,322.00 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| N | 08 | 09 | 14 | 29 |

**ராசி சுப பலன்** හඳහන Handahana

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 305 | ரூ. 2,608,866.20 |

| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | விசேட இலக்கினம் |
|---|---|---|---|---|---|
| துலாம் | 21 | 23 | 39 | 47 | துலாம் |

**ஜாதிக சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 1451 | ரூ. 13,251,933.60 |

| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனுசு | 2 | 4 | 2 | 6 | 9 | 7 |

**கொவிசெத** ගොවි සෙත Govisetha

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 3238 | ரூ. 69,965,046.80 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| U | 16 | 23 | 46 | 60 |


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## 2011 இலக்கம் 40 நிதி மோசடியைத் தவிர்க்கும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இ. 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் சொத்துக்களை செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்

மினுவாங்கொட, யட்டியன, இல. 101/பி/1 என்ற முகவரியில் அமரதுங்க ஆரச்சிகே கவித்ர ருவன் குமார மற்றும் மஹபாலகே தொன் சசினி திலங்ஜிதா என்பவர்களால் கீழ்க்காணும் சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்டவிரோதமான செயற்பாட்டில் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாட்டின் மூலமான நிதியில் பெறப்பட்ட அல்லது அடக்கப்பட்ட சொத்தாக உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ஆம் பிரிவின் பிரகாரம் 2022.09.14 முதல் அவிசாவளை உயர் நீதிமன்றம் HC/SPL/01/2022 இன் கீழ் செயற்பாடற்றதாக்கும் கட்டளை உறுதி செய்யப்பட்டு நீடிக்கப்பட்டுள்ளது.

i. சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு அஷானிகா ஆர் ஜயலத் இனால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2016.02.18ம் திகதிய இல. 271 எனும் விற்பனை முறைமை மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள 461/ஏ அங்கமுவ கிராம அதிகாரி பிரிவில் அமைந்துள்ள அம்பஹவத்த எனப்படும் மீகஹவத்த எனும் சீ. ஜீரசிங்க உத்தரவாதம் பெற்ற நில அளவையாளரால் அளந்து தயாரிக்கப்பட்ட 2001.11.20ம் திகதிய இல. 1806 எனும் வரைபடத்தின் துண்டு இல. 02 மற்றும் 03 எனும் 19 பேர்ச் வீதமான காணி மற்றும் அதற்குள் அமைந்துள்ள சொத்துக்கள்.
ii. பதிவு இல. WPLN-7568 எனும் JMC வகை மோட்டார் லொறி (செசி இல. LEFYECA29HHNA3929 என்ஜின் இலக்கம் JX493QIIIC182510)
iii. பதிவு இல. WPLO-7212 எனும் JMC வகை மோட்டார் லொறி (செசி இல. LEFYECA23JHN39383 என்ஜின் இலக்கம் JX493QIJ5063730)
iv. பதிவு இல WP CBF-4468 எனும் TOYOTA வகை மோட்டார் கார் (செசி இல. M900A-0068609 என்ஜின் இல. 1KR-1843879)
v. பதிவு இல WPPI-8291 எனும் TOYOTA வகை மோட்டார் வேன் (செசி இல. TRH-200-0214955 என்ஜின் இல. 1TR-1571974)
vi. கொமர்ஷல் வங்கி பாதுக்க கிளையின் இல. 1187007495 எனும் நடைமுறைக் கணக்கு 2022.05.20ம் திகதிக்கான நிலுவை ரூபா 4,597,017.99 தொகை உண்டு.

மேற்படி சொத்து பற்றிய தமது உரித்துரிமை கோரலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு வசதியாக மூன்றாம் தரப்புக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கின்றேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**அவிசாவளை உயர் நீதிமன்றம்.**


## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம். 001/T/2023**

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பாதுகாப்பு பதவியணியினருக்கு இரு வருடங்களுக்காக (02) சீருடைத் துணிகளை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பாதுகாப்பு பதவியணியினருக்கு இரு வருடங்களுக்காக (02) சீருடைத் துணிகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா **நான்காயிரம் (4,000.00 ரூபா)** காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவினால் **2023.01.13** ஆந் திகதி முதல் **2023.02.06** ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் **மு.ப. 9.00** மணியிலிருந்து **பி.ப. 3.00** மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் **2023.02.07 ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00** மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா **இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் (ரூபா 225,000.00)** பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி,விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103/011-2264102 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# மன்னாரில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும்



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளும் இணைந்து மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்திற்கான கட்டுப்பணத்தை இலங்கை தமிழரசு கட்சி சார்பாக நேற்று புதன் கிழமை(11) காலை 11.30 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் செலுத்தினார்.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

**சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டம் சார்பாக நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளோம். 2018 ஆம் ஆண்டு தேர்தல் முறைமை காரணமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மாத்திரம் தனித்து போட்டியிடுவது என தமிழ் தேசியக்கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையில் எந்த பிரச்சினையும் இல்லை. உதாரணமாக மன்னார் நகர சபையில் நாங்கள் ஒரு வட்டாரத்தை தவிர மிகுதி வட்டாரங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. ஆனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களால் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது. வேறு கட்சியைச் சேர்ந்தவர்களை அழைத்தே நாங்கள் ஆட்சி அமைத்தோம். இதன் காரணமாகவே தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுவதாகவும்,வெற்றி பெற்று வருகின்ற உறுப்பினர்கள் ஒன்றாக ஆட்சியமைப்பதாகவும், முடிவெடுத்துள்ளோம். ஒவ்வொரு வட்டாரத்திலும் மூன்று கட்சிகள் சார்பாக போட்டியிட்டால் அந்த மூன்று கட்சி சார்பாகவும் வாக்களிக்குமாறு தெரிவிப்போம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் இணைந்து மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தல்

# கட்டுப் பணத்தைச் செலுத்தியது இலங்கை தமிழரசு கட்சி

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சியில் இலங்கை தமிழரசு கட்சி கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் முகமாக நேற்று (11.01.2023) கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளையின் செயலாளர் வீரபாகு விஜயகுமார் ஆகியோர் நேற்று மதியம் கட்டுப்பணத்தை செலுத்தினர்.

மேற்படி மூன்று பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணத்தை முதலாவதாக தமிழரசு கட்சி செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சடலம் மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.செல்வ சந்நிதி ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள தொண்டமானாறு கரையோரத்திலிருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.


ஆற்றில் நீராட சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் ஜனாதிபதியால் திறக்கப்படும்

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ்ப்பாணத்தில் இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளதுடன் கலாசார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளையும் அவர் ஆரம்பித்து வைப்பார் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்போடு இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதுதொடர்பான முன்னேற்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முப்படைகளின் பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போதே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன் இந்த தகவலை வெளியிட்டார்.

# தமிழ்க்கட்சிகள் 20 வருடங்கள் ஒன்றாக சேர்ந்திருந்து மக்களுக்கு என்ன செய்தார்கள்?

அம்மான் படையணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜெயா சரவணன் கேள்வி

**ஓமந்தை விஷேட நிருபர்**



தமிழ்க்கட்சிகள் கடந்த 20 வருடமாக ஒன்றாக சேர்ந்திருந்து தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள்? என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உபதலைவரும் அம்மான் படையணியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான ஜெயா சரவணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று (11) வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மாவீரர் தினம் வந்ததும் மண்வெட்டியை தூக்கி வைத்துக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து பணம் பெற்றுக்கொள்வதைத்தவிர வேறு எதை செய்தார்கள்?, இனி ஒன்றும் நடைபெறப்போவதில்லை. பிரிந்து செல்வது நல்லது. அம்மான் படையணி என்பது சமூகச்சீரழிவுகளை தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட படையணி. போதைவஸ்துக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களாக குரல் எழுப்பி போராடி வருகின்றோம். எமது தலைவரிடமிருந்து அழைப்பு கிடைத்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுமாறும் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் வடமாகாணத்திற்கு தலைவரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்.

எமது சிறார்களை காப்பாற்ற நாங்கள் எடுத்த நடவடிக்கையினால் பல கிலோ போதைப்பொருட்களை கைப்பற்றி விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்திருக்கின்றோம். வடபகுதியில் எமது இளைஞர்களினால் பல கோடி பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன அதேபோல பாடசாலைகளில் எமது படையணியின் இளைஞர்களினால் கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் படையினரிடம் ஒப்படைத்துச் செயற்பட்டு கொண்டிருக்கின்றனர். இளைஞர் யுவதிகளுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# யாழ். மாநகர எல்லைக்குள் டெங்கு ஒழிப்பு

09 பேருக்கு எதிராக வழக்கு

111 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை!

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 111 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, சிவப்பு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதார பிரிவு அறிவித்துள்ளது.

பருவ மழையை அடுத்து யாழில் டெங்கு நுளம்பின் அதிகரிப்பு காரணமாக , யாழில். டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்தது. கடந்த ஆண்டில் 09 பேர் டெங்கு காய்ச்சலினால் யாழில். உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது ஆயிரத்து 505 குடியிருப்புக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது 74 குடியிருப்புக்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டன. அதில் 65 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதேவேளை, டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 111 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

# லண்டனில் வசிக்கும் பழைய மாணவர்களால் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு பஸ் அன்பளிப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**



நெல்லியடி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்காக லண்டன் பழைய மாணவர்களால் பஸ் வண்டியொன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்வி கற்று லண்டனில் வசிக்கும் பழைய மாணவர்களால் 5.8 மில்லியன் ரூபா நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட பஸ்வண்டி பாடசாலை அதிபர் கிருஸ்ண குமாரிடம் நேற்று புதன்கிழமை (11) முற்பகல் கையளிக்கப்பட்டது.

பாடசாலைக்கு அருகிலுள்ள ஆலயத்தில் பூஜைகள் இடம்பெற்று அதனைத்தொடர்ந்து பாடசாலையில் வைத்து பஸ்வண்டியொன்றும் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், லண்டன் பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழில். உலக ஹிந்தி மொழி தின நிகழ்வுகள்



உலக ஹிந்தி மொழி தின நிகழ்வுகள், இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது ஹிந்தி மொழிக் கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஹிந்தி மொழி சார்ந்த கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. யாழ்.இந்திய துணைத் தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

படங்கள்: யாழ்.விசேட நிருபர்



# மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரம் மடக்கிப் பிடிப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதிப்பகுதி ஊடாக மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தை கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன் சந்தேகநபரொருவரை கைதுசெய்துள்ளனர். சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் கைது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் சொந்தவீட்டுக்கு தீ வைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

மதுபோதையில் வீட்டுக்கு வந்து, மனைவியுடன் முரண்பட்டவர், குடியிருக்கும் வீட்டினை தீ வைத்து கொளுத்தியுள்ளார்.

அச்சுவேலி பாரதி வீதியில் இடம்பெற்ற சம்பவத்தில் வீடு பகுதியளவில் எரிந்துள்ளது. வீட்டிற்கு தீ வைத்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் அச்சுவேலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் அதிக மதுபோதையில் வீட்டிற்கு வந்து, மனைவி, பிள்ளைகளுடன் சண்டையிட்டு, அவர்களை வெளியே துரத்தி, வீட்டை பூட்டி, யன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளார். அதன் பின்னர் வீட்டிற்கு தீ வைத்துள்ளார்.

வீட்டில் தீ பரவியதைடுத்து அயலவர்கள் ஒன்று கூடி பலத்த சிரமத்தின் மத்தியில் தீயை அணைத்தனர். இருந்த போதிலும் வீடு பகுதியளவில் எரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் வீட்டிற்கு தீ வைத்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தரை கைது செய்துள்ளனர்.

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு யாழ்.வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த முதியவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதியில் சுயநினைவற்று காணப்பட்ட முதியவர் ஒருவர் நோயாளர் காவு வண்டி ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உரியவர்கள் சடலத்தை அடையாளம் காட்டி, பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# நூலகப் பழக்கம் சமூகத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கும்

வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த்

**கரவெட்டி தினகரன் வேலணை குரூப் நிருபர்கள்**

பாடசாலை கல்வியுடன் நூலக பழக்கத்தையும் மாணவர்கள் பின்பற்றுவார்களானால் சமூகத்தில் சிறந்த பிரஜையாக உருவாக முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச உதவி நிர்வாகப் பொறுப்பாளரும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினருமான அனுசியா ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேசத்துக்கான நூலக தினம் பிரதேச சபை தேவா கலையரங்கில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மாணவர்கள் மத்தியில் நூலகம் சென்று வாசிக்கும் பக்குவம் மிகவும் அரிதாகிவிட்டது. இதற்கு நவீன தொழில்நுட்பங்களின் வருகையும் அதனுடன் இணைந்த சமூக ஊடகங்களும் காரணமாக அமைந்துள்ளது.

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் தைப்பொங்கலின் பின்னர் பெரும்போக நெல் அறுவடைப்பணி



*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி தைப் பொங்கல்பண்டிகையைத்தொடர்ந்து, பெரும்போக நெல் அறுவடைப் பணியை தொடங்கவுள்ளதுடன், இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் தாம் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், பெரும்போக நெல் அறுவடைக்காக ஏனைய மாவட்டங்களிலிருந்து அறுவடைத் தொழிலாளர்களை வரவழைக்கவுள்ளதாகவும், நேற்று (11) விவசாயிகள் தெரிவித்தனர்.

இம்மாவட்டத்தில் கடந்த போகங்களின் ஆரம்ப அறுவடையின் போது, தனியார் நெல் கொள்வனவாளர்களும் அரிசி ஆலைகளின் உரிமையாளர்களுமே நெல் கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர். இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கினர். ஆகவே, இம்முறை பெரும்போகநெற்செய்கையில்ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் நுகர்வோரைப் பாதிக்காத வகையிலும் பெரும்போக அறுவடை நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

பெரும்போக நெல் அறுவடை தொடங்கவுள்ள இவ்வேளையில், நெல் கொள்வனவுக்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமெனவும், விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் சிறுவர் நலன் சார்ந்த விடயங்கள் யுனிசெப்பினால் ஆராய்வு

*மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்*



ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் சிறுவர்களின் நலன் சார்ந்த கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இது தொடர்பான கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபரிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பினால், முன்பள்ளிகளுக்கு அனுசரணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டன.

அதாவது, 'வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போஷாக்கு மற்றும் அச்சிறுவர்களின் வளர்ச்சி மட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படாது பேணுவது தொடர்பாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் நிலைப்பாடுகளை சுகாதாரத்துறை அதிகாரிகள் முன்வைத்தனர்.

இதேவேளை, சிறுவர்களின் உளவளச் செயற்பாடுகள், போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பாடசாலை மட்டச் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் குணசிங்கம் சுகுணன் சமர்ப்பித்தார்.

பொருளாதாரத் தளம்பல் காரணமாக அதிகரித்து வரும் பாடசாலை இடைவிலகல், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள், கிராமங்களிலிருந்து நகர்களுக்கான மாணவர்களின் புலம்பெயர்வு, மாணவர்களின் உளப் பாதிப்புகள், தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்தல் போன்றவை தொடர்பாகவும் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டன.

## புகையிரதம் மோதி இளைஞர் படுகாயம்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

மட்டக்களப்பில் புகையிரதம் மோதியதில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (10) இரவு இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த புகையிரதமானது, மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை வந்தடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னராக, புகையிரதத் தண்டவாளத்துக்கு அருகில் நின்ற மேற்படி இளைஞர் மீது மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த மேற்படி இளைஞர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக விரிவான விசாரணையை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித் தேர்தலில் மு.கா மரச்சின்னத்தில் போட்டியிட முடிவு





*கல்முனை மத்திய, சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்கள்*

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனித்து தனது மரச் சின்னத்தில் போட்டியிடுமென்று, அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

மு.கா.வின் அம்பாறை மாவட்டச் செயற்குழுக் கூட்டம், மருதமுனை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற போதே, அவர் இதனைக் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் மு.கா.வின் தற்போதைய நடவடிக்கைகள், எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு களம் இறங்குவது, கட்சியின் எதிர்கால செயற்றிட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்தலோசிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்ஹரீஸ், பைசால் காசிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம் மன்சூர், அலி சாஹிர் மௌலானா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஊரியன்கட்டு பிரதேசத்தில் பொங்கல் பொருட்கள் வழங்கல்



*பாசிக்குடா நிருபர்*

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை ஊரியன் கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட். கல்குடா ஊரியன்கட்டு பாடசாலை மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் (10) இப்பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வாகரை பிரதேச 233ஆவது படைப்பிரிவின் பிரிக்கேடியர் வசந்த கேவகே, நாவலடி கஜபா ரெஜிமன்ட் படைப்பிரிவின் உயரதிகாரி லசந்த, கல்குடா வலயக் உளவளத் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் விஷ்வ ஜித்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிரான்ஸிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இதற்கான நிதியுதவியை வழங்கினர்.

## மான் இறைச்சியுடன் கைதானவருக்கு அபராதம்

*தோப்பூர் குறூப் நிருபர்*

மான் இறைச்சியை வைத்திருந்த ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபாரதத்தை விதித்து மூதூர் நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (10) தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவரப் பகுதியில் மான் இறைச்சியை வைத்திருந்த அதே பகுதியைச் சேர்ந்த மேற்படி நபரை கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்து ஒரு கிலோ மான் இறைச்சியையும் கைப்பற்றினர்.

இச்சந்தேக நபர், மான் இறைச்சி வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை பொலிஸார் கைது செய்தனர்.

## கல்முனை கடற்கரையில் சிரமதானப்பணி



*கல்முனை மத்திய தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்*

சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கில் கல்முனை கடற்கரையில் சிரமதானப்பணியை கல்முனை பிரதேச இளைஞர் நல்லிணக்கக்குழு உறுப்பினர்கள் நேற்று (11) மேற்கொண்டனர்.

ஜிசேர்ப் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் ஹெல்விடாஸ் அனுசரணையுடனும் இச்சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

சமாதானமும் சமூகப் பணி நிறுவனத்தினால் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது, கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் இளைஞர், யுவதிகள் பலர் கலந்துகொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

## அக்கரைப்பற்றில் நீர்ப்பாவனை கட்டண நிலுவையை செலுத்துமாறு பணிப்பு

*ஒலுவில் விசேட நிருபர்*

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய காரியாலயத்துக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 6 மாதங்களாக மாதாந்த நீர்ப்பாவனைக் கட்டண நிலுவையைச் செலுத்தாத நீர்ப் பாவனையாளர்களை கட்டண நிலுவையை செலுத்துமாறு, அப்பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம். முஸாஜித் கேட்டுக்கொண்டுள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, பொத்துவில், கல்முனை ஆகிய பிரதேசங்களில் நீர்ப் பாவனைக் கட்டண நிலுவையைச் செலுத்தாமல் பலர் உள்ளதுடன், இவர்களுக்கு நீர் விநியோகத் துண்டிப்புத் தொடர்பாக அறிவித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். கட்டணம் செலுத்தாமலுள்ள நீர்ப் பாவனையாளர்களின் நிலுவைத் தொகை மற்றும் பாவனையின் அளவைக் கவனத்திற்கொண்டு இணைப்புத் துண்டிக்கப்படவுள்ளது. ஆகையால், கட்டண நிலுவையைச் செலுத்தாமலுள்ள வாடிக்கையாளர்கள், தமது பாவனைக்கான கட்டண நிலுவையைச் செலுத்தி, அசௌகரியங்களிலிருந்து விலகிக் கொள்ளுமாறு, அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, நீர் துண்டிக்கப்படும் வாடிக்கையாளர்கள், நீர்க் கட்டண பட்டியல் தொகையுடன் தண்டப்பணத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே அவர்களுக்கு மீளிணைப்பு வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## பொங்கல் வியாபாரம்
## மூதூரில் இரவு 11 வரை கடைகள் திறப்பு

*மூதூர் தினகரன் நிருபர்*

எதிர்வரும் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மூதூர் நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் நாளை மறுதினம் (14) இரவு 11 மணி வரை திறக்கவுள்ளதாக, வர்த்தகர்கள் அறிவித்துள்ளனர்.

தைப்பொங்கலை முன்னிட்டு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மூதூர் நகருக்கு உள்ளூரைச் சேர்ந்தவர்களும் வெளியூரைச் சேர்ந்தவர்களும் பெருமளவில் வருகை தருவதை அவதானிக்க முடிவதாகவும், வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதியே இவ்வர்த்தக நிலையங்களை கூடிய நேரத்துக்கு திறக்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## கிழக்கில் போதைப்பாவனைக்கு எதிராக சைக்கிளோட்டம்



*சாய்ந்தமருது விசேட நிருபர்*

'போதையை ஒழிப்போம், மாணவர்களைக் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை மாவட்டம் முதல் பொத்துவிலின் அறுகம்பை பிரதேசம் வரை தனிநபர் சைக்கிளோட்டம் கிழக்கு மாகாண சபை முன்றலில் நேற்று (11) காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

பொத்துவில் ரோயல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சைக்கிளோட்டத்தில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இச்சைக்கிளோட்டத்தை, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் ஆரம்பித்து வைத்தார்.

## மாணவர்களை இலக்குவைத்து ஹெரோயின் விற்றவர் கைது

*சவளக்கடை குறூப் நிருபர்*



பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நீண்டகாலமாக ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கடற்கரை மக்பூலியா பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமாக ஒருவர் நடமாடுவது தொடர்பாக விசேட அதிரடிப்படையினருக்கு நேற்று முன்தினம் (10) இரவு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த 22 வயதுடைய இச்சந்தேக நபரைக் கைது செய்துள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர், அவரிடமிருந்து ஒரு கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன் சந்தேக நபரை பெரியநீலாவணை பொலிஸாரிடம் கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## சர்வதேச புலம்பெயர்வு தின விழிப்புணர்வு கருத்தரங்கு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*



சர்வதேச புலம்பெயர்ந்தோர் தின விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தனின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற இக்கருத்தரங்கின் போது, வெளிநாடுகளுக்குச் செல்வதாயின் சட்ட விதிகளை பின்பற்றி பாதுகாப்பான முறையில் செல்ல வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

முகவர்களை நம்பி அதிகளவான புலம்பெயர் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, பிரதேச செயலக மட்டங்களில் புலம்பெயர் அமைப்புகள் உருவாக்கப்பட்டதுடன், புலம்பெயர்வோருக்கு அறிவூட்டுவது தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டது.

# நகர்வலம்



# ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு விழா 19ஆம் திகதி

## ஜனாதிபதி ரணில் பிரதம அதிதியாக பங்கேற்பு

## தென் ஆபிரிக்க உலமா சபை தலைவர் சிறப்புரை, விசேட முத்திரையும் வெளியீடு

**எம்.எஸ்.பாஹிம்**

சன்மார்க்க அறிஞர்களின் அமைப்பான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி உலமா சபைத் தலைவர் மௌலவி அஷ்ஷெய்க் எம்.ஐ. றிஸ்வி முப்தியின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு கௌரவ அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன பங்கேற்கிறார்.

உலமாக்கள் அப்பணிகளை கட்டுக்கோப்புடன் மேற்கொள்வதற்கு காலியில் அமைந்துள்ள பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யா அரபுக் கல்லூரியில் 1924 ஆம் ஆண்டு மார்க்க அறிஞர்களால் உருவாக்கப்பட்ட உலமா சபை, 2000 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டது. தற்போது ஜம்இய்யா 24 மாவட்டங்களில் 163 கிளைகளைக் கொண்டுள்ள இந்த அமைப்பில் 8300 க்கும் மேற்பட்ட மார்க்க அறிஞர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.



இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் வாழுகின்ற, தீனின் மேம்பாட்டிற்கும் சமூகத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு கட்டுக்கோப்பான முன்மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் உலமா சபையின் மாநாட்டை சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நூற்றாண்டு விழா நிகழ்வில் அப்துல் ஹாலிக் மௌலவி வரவேற்புரை நிகழ்த்த இருப்பதோடு உலமா சபையின் எதிர்கால திட்டங்கள் பற்றி உலமா சபை பொதுச் செயலாளர் அர்கம் நூராமித் மௌலவி உரையாற்ற இருப்பதோடு உலமா சபையின் தலைவர் எம்.ஐ. றிஸ்வி முப்தியின் உரையும் இடம்பெற உள்ளது.





ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரும் உரையாற்ற உள்ள அதேவேளை, தென் ஆபிரிக்கா உலமா சபை தலைவர் மௌலானா இப்ராஹீம் பாம் சிறப்புரையாற்றுவார்.

நூற்றாண்டை முன்னிட்டு விசேட முத்திரை வெளியிடப்பட இருப்பதோடு முதல் முத்திரையை ஜனாதிபதி வெளியிட்டு வைப்பார். அதனைத் தொடர்ந்து உலமா சபை உப தலைவர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் தலைமையில் நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்படும். அடுத்து பிரகடனம் வெளியிடப்படும்.

கலாநிதி முபாரக் மதனி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற இருப்பதோடு அஷ்ஷெய்க் கலாநிதி அஸ்வர் நன்றியுரையாற்றுவார்.

இதே வேளை துஆப் பிரார்த்தனையை அஷ்ஷெய்க் உமர்தீன் மௌலவி நிகழ்த்துவார். இந்த விழாவில் டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி மாணவர்கள் தேசிய கீதம் இசைப்பர். வெலிகம தன்வீர் அகடமி மற்றும் டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி மாணவர்களின் கஸீதாவும் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொலன்னறுவை மாவட்டத்தில் SLPP நேற்று கட்டுப்பணம்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொலன்னறுவை மாவட்டத்திற்கான கட்டுப்பணம் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று (11) செலுத்தியுள்ளனர்.

பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரு மாநகர சபை உட்பட 08 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உட்பட இராஜாங்க அமைச்சர் பொலன்னறுவை மாவட்ட குழுத் தலைவர் சிறிபால கம்லத், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் சமரவிக்ரம உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பொலன்னறுவை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொதுஜன பெரமுனவின் செயலாளர், கடந்த கால தேர்தல்களை விட இம்முறை சிறப்பான வெற்றி கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

# பேராதனை பல்கலைக்கழக கொழும்பு பிராந்திய பழைய மாணவர் ஒன்றுகூடல்

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர்களது கொழும்பு பிராந்திய ஒன்றுகூடல் இராஜகிரிய புதகமுவ வீதியில் அமைந்துள்ள பேர்ட்ஸ் பார்க்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் திகதி காலை 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. இந்த ஒன்றுகூடலில், போட்டிகள், நிகழ்ச்சிகள், கலைஞர்களின் இசை நிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளுக்கான அனுமதிச்சீட்டுகளை செயற்குழு உறுப்பினர்களிடமும் ஒன்றுகூடல் நடைபெறும் நாளன்று நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ள முடியுமென சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியத் கப்ரால் (தொலைபேசி இலக்கம் 0777560708) தெரிவித்துள்ளார்.

# அஸ் ஸஅத்தியதுல் இஸ்லாமியாவில் மௌலவியா பட்டமளிப்பு விழா

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை மாளிகாச்சேனை அஸ் ஸஅத்தியதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்தாவது மௌலவியா பட்டமளிப்பு விழாவும் 10வது வருட பூர்த்தி வைபவமும் கடந்த 8ம் திகதி நூன் கல்வி நிறுவக மண்டபத்தில் நடைபெற்றது.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அஷ்செய்ஹ் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவியின் வழிகாட்டலுடன் இயங்கும் இந்த மகளிர் கல்லூரியானது அரச அங்கீகாரம் பெற்றதாகும்.

ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில் 11 பேர் பட்டம் பெற்றதோடு அவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களின் தந்தைமார்களிடம் வைபவத்தில் கையளிக்கப்பட்டது.

கலாபீட நிர்வாக சபைத் தலைவரும் நௌபல் ஜெம்ஸ், சாமிலா ஜுவலர்ஸ் உரிமையாளருமான நௌபர் ஹாஜியார் வரவேற்புரை நிகழ்த்தியதோடு அல் மத்ரஸதுல் நபவிய்யா, அல் மத்ரஸதுல் முஸ்தபவிய்யா மாணவர்களின் கஸீதாக்களும் இடம்பெற்றது.

மௌலவி முஹம்மத் பாஹிம் (முஸ்தபவி), மௌலவி முஹம்மத் றஸ்மி (முஸ்தபவி) ஆகியோர் பட்டமளிப்பு விழாவில் விசேட சொற்பொழிவாற்றினார்.

கலாபீட கௌரவ தலைவர் அப்துல் பாரி, பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், நூன் கல்வி நிலைய நிறுவன பொறுப்பாளர் ஏ.எச்.எம்.முபாரக் (ஆசிரியர்), பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் அப்துல் காதர் உட்பட உலமாக்கள், புத்திஜீவிகள்,காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள்,பெற்றோர்கள்,குர்ஆன் மத்ரஸா சிறார்கள் பலரும் கலந்து கொண்டனர்.





இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்காக சட்டத்தரணி கௌசல் நவரத்ன வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2023/2024 தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்வது புதன்கிழமை (11) நிறைவடைந்த நிலையில் தலைவர் பதவிக்காக சட்டத்தரணி கௌசல் நவரத்னவும் செயலாளர் பதவிக்காக இசுரு பாலபட்டபந்தியும் வேட்புமனுத்தாக்கல் செய்தனர்.



சென்னை 46வது புத்தகக் கண்காட்சியில் முதல் நாள் நிகழ்ச்சியில் டாக்டர் எஸ். முருகுசுந்தரத்தின், "டாக்டர் வள்ளுவர்" எனும் நூலில் சிறப்பு பிரதியை புரவலர் ஹாசீம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் அருகில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், பிரபல நடிகரும் இயக்குனருமான எஸ். தியாகராஜன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் எமக்கு அதிகாரத்தை தாருங்கள்!

## வெலிகம கூட்டத்தில் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார



**வெலிகம தினகரன் நிருபர்**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமக்கு அதிகாரத்தை பெற்றுத் தந்தால் பாராளுமன்றத்தை ஒருமாத காலத்துக்குள் கலைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என தேசிய மக்கள் முன்னணி தலைவர் அநுரகுமாரா திசாநாயக தெரிவித்தார்.

வெலிகமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நீண்ட காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான அரசியலை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கமாகவே நாம் உங்களிடம் வந்துள்ளோம். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை தீர்த்து வைக்க நாம் சரியான திட்டங்களை மேற்கொள்வோம்.

தேர்தலை நடாத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கே அதிகாரம் உண்டு. சிலர் தேர்தலை பிற்போட முயற்சித்து வருகின்றனர். இது எப்படியிருந்தும் தேர்தல் வேட்பு மனுக்களை கோரியிருக்கும் இந்நிலையில், தேர்தலை உரிய தினத்தில் நடாத்த தேர்தல் ஆணைக் குழுவுக்கே அதிகாரம் உண்டு. நாட்டில் தேர்தல் நடாத்த பணம் இல்லை என்று கூறிக் கொண்டு தேர்தலை தற்போது நடாத்த வேண்டாம் என கூறுகின்றனர்.

நீண்ட காலமாக நடைமுறையிலுள்ள பாதையை மாற்றி அமைக்க வேண்டும். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவே நாம் முன்வந்துள்ளோம். எத்தனையோ மாற்றங்கள் செய்து பார்க்கப்பட்டன. கடந்த கால தேர்தல்களில் மக்கள் மாற்றங்களை எதிர்பார்த்து வாக்களித்தனர். எனினும் மக்களுக்கு தேவையான மாற்றங்கள் ஏற்படவில்லை. இம்முறையாவது சிந்தித்து புதிய மாற்றம் ஒன்றை நாட்டினுள் ஏற்படுத்த முயற்சிப்போம்' என்றார்.

# ஐக்கிய காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

**எம். எஸ். முஸப்பிர்**

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டம் கற்பிட்டி பிரதேச சபைக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி நேற்று புத்தளம் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

இந்நிகழ்வில் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளரும், புத்தளம் மாவட்டப் பொறுப்பாளருமான ஸப்வான் சல்மான் மற்றும் கற்பிட்டி பிரதேச அமைப்பாளர் பாரூக் முஹம்மது ராஃபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சி புத்தளம் மாநகர சபை, புத்தளம் பிரதேச சபை உள்ளிட்ட ஏனைய சபைகளிலும் போட்டியிட உள்ளதோடு, அவைகளுக்கான கட்டுப் பணம் எதிர்வரும் தினங்களில் செலுத்தப்படும் என கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளரும் புத்தளம் மாவட்டத்திற்குப் பொறுப்பாளருமான ஸப்வான் சல்மான் தெரிவித்தார்.

# தேசிய ரீதியில் கையெழுத்துப் போட்டியில் மூன்றாம் இடம்

**ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் தரம் பத்தில் கல்விகற்கும் மாணவி பாத்திமா ஆயிஷா மஹ்மூர் கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை ஆங்கிலமொழித் தின கையெழுத்துபோட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இம் மாணவி பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று கோட்ட மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டு அதில் இரண்டாவது இடத்தினை பெற்று வலய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அதில் முதலாம் இடத்தினை பெற்று தென் மாகாண போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டார். அதன் பின் மாகாண மட்டத்தினூடாக அகில இலங்கை போட்டிக்குதெரிவு செய்யப்பட்டு அதில் தேசியரீதியில் மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

# வாழைச்செய்கை ஏற்றுமதி மூலம் 80,000 ஆயிரம் டொலர் வருமானம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் ராஜாங்கனை பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வாழைச்செய்கை ஏற்றுமதி மூலம் மாதமொன்றுக்கு 80,000 க்கும் அதிகமான டொலர் நிதி எமது நாட்டுக்கு கிடைப்பதாக மாவட்ட விவசாய பணிப்பாளர் லலித்தா தேனுவர தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் நவீன விவசாய வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டின் ஐந்து மாகாணங்களின் 12 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்திலான ஏற்றுமதி வாழைச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அநுராதபுரம் ராஜாங்கனையாய 04ம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புளிவாழைச் செய்கையின் மூலம் கிடைக்கும் வாழைப்பழங்கள் ஒரு வாரத்திற்கு 12,500 கிலோகிராம் அளவிலான தொகை துபாய் நாட்டிற்கு தற்சமயம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.இதன் மூலமே ஒரு வாரத்திற்கு 80,000 டொலர் நிதி எமது நாட்டுக்கு கிடைக்கின்றது.

எதிர்வரும் காலத்தில் மாலைதீவு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வேண்டி பொதிசெய்யும் நிலையமொன்றும் ராஜாங்கனை பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி விவசாயப் செய்கையை ஏற்றுமதி தரத்திற்கு முன்னேற்றுவது என்பது காலத்தின் தேவையாக இருக்கின்றது என அநுராதபுரம் மாவட்ட விவசாய பணிப்பாளர் லலித்தா தேனுவர மேலும் தெரிவித்தார்.

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

நாச்சியாதீவில் இனந்தெரியாதோர்களினால் கொண்டு வந்து விடப்படும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் தற்போது இக்கிராமத்தில் அதிகரித்து காணப்படுவதோடு வீதியில் செல்வோரை பதம் பார்ப்பதற்கும் அது விட்டுவைப்பதில்லை.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்களும் அச்சமடைந்துள்ளனர்.

எப்போதும் இல்லாதவாறு வீதியெங்கும் நாய் கூட்டம் அதிகரித்து பாதையில் செல்லும் சிறியவர் முதல் பெரியவர்களை கூட கடிக்க துரத்தும் நிலை இப் பகுதியில் காணப்படுகின்றது.

அத்துடன் என்றும் இல்லாதவாறு காட்டுக் குரங்குகளின் அட்டகாசமும் இங்கு தலை தூக்கியுள்ளது.

கூட்டம் கூட்டமாக வரும் குரங்கு கூட்டங்கள் வீட்டு கூரைகளில் பாய்ந்து வீட்டு கூரைகளுக்கு சேதத்தை உண்டு பண்ணுவதும் மாங்காய் போன்ற கனிகள், காய்கள், மரக்கறி வகைகளை உண்டு சேதப்படுத்துவதும் அன்றாடம் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளாகும்.

இது பற்றி உரிய அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்த வேண்டும் என இப் பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



பாணந்துறை பிரதேச சபைக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பு மனுவில் பிரதேச சபைத் தலைவர் ஹேமந்த பெர்னாண்டோ கையொப்பமிடுவதைப் படத்தில் காணலாம். முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தனவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்னவும் படத்தில் காணப்படுகிறார். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# அலிசப்ரி ரஹீம் எம்.பி ஏற்பாட்டில் உ/த மாணவர்களுக்கு கருத்தரங்கு



(புத்தளம் தினகரன் நிருபர்)

"அறிவால் உலகை ஆள்வோம், அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு" எனும் தொனிப்பொருளில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தனது BCMH நிறுவனத்தின் ஊடாக உயர்தர மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்த உயர் தர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு (09) புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் அதிபர் ஐ.ஏ.நஜீம் தலைமையில் நடைபெற்றது. செயலமர்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக தனது நிறுவனத்தின் மூலம் சொந்த பணத்தில் பல சேவைகளை செய்வதாகவும், ஒவ்வொரு வருடமும் பாடசாலை மாணவர்களுக்கு 10,000 பாடப்பொதிகள் வழங்கும் திட்டத்தை இம்முறையும் அமுல்படுத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதாகவும் கூறினார். மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்று நாட்டுக்கும், சமூகத்திற்கும் நற்பண்புள்ள நற்பிரஜைகளாக திகழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு பரீட்சையில் வெற்றி பெற மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்ஸி ஜமால்தீன், கல்வி பிரிவுக்கான இணைப்பாளர் ஆசிரியர் அஸ்லாம், வளவாளர் ரஸீல் ஆசிரியர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பால்மா

மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலகம் ஏற்பாடு



திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக பால் மா வழங்கும் நிகழ்வு ஒன்று மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜி. சேனாரத்ன தலைமையில் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை ஆயுதப்படையின் 03 வது கவச படைப்பிரிவின் ஒருங்கிணைப்பில் ஃபோன்டேராவின் அனுசரணையுடன் இந்த இலவச பால் மாவு வழங்கும் வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் கீழ் குறைந்த வருமானம் பெறும் 145 குடும்பங்களுக்கு பால் மாவு விநியோகிக்கப்பட்டுள்ளது நிலையான வருமான இல்லாத 05 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் தகுதியான பயனாளிகளாக இதில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவின் உதவி பிரதேச செயலாளர் திரு. சஞ்சய் லக்மால், இலங்கை ஆயுதப்படையின் 03வது கவசப் படைப்பிரிவின் தளபதி லெப்டினன்ட் கேணல் என்.வி.ஏ.எம். விதானகே மற்றும் பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.


## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல. LA/1783**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல. 4-3/17/2021/D/பொது/iv**

கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு பகுதி - III இல் 2022ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி மற்றும் 2022ஆம் ஆண்டு மார்கழி மாதம் 16ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானி பத்திரிகை (அதி விசேஷமானது) இலக்கம் 2303/15 மற்றும் 2310/45 பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை |
| கிராம அலுவலர் பிரிவு | : பலாலி மேற்கு (J/256), மயிலிட்டி வடக்கு (J/246) |
| கிராமத்தின் பெயர் | : மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு, பலாலி |
| ஆரம்ப வரைபட இல | : பிபியா 3005 |
| காணித்துண்டு இல. | : 1-436 |

**சண்முகராஜா சிவஸ்ரீ**
**பிரதேச செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு.**

**பிரதேச செயலகம்,**
**வலிகாமம் வடக்கு,**
**தெல்லிப்பளை,**
**யாழ்ப்பாணம்**


# செங்கலடி பிரதேசத்தில் வேத சிவாகம பயிற்சி

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

எதிர்வரும் சில தினங்களினுள் செங்கலடிப் பிரதேசத்தில் மற்றுமொரு வேத சிவாகமப் பயிற்சிப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாக, கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ க.லோகநாதக் குருக்கள் நேற்று (11) அறிவித்துள்ளார்.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள வேத சிவாகமப் பயிற்சியில் மட்டக்களப்பு, ஏறாவூர் வாழைச்சேனை, கிரான் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்துக்குருமார்கள் கலந்துகொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதன்போது ஆகமம், பூஜை முறைகள், யோகாசனம், சங்கீதம் போன்றவை தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்துக்கு முன்பாக இதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதினால், செங்கலடி பிரதேசக் கிளைத் தலைவர் சிவஸ்ரீ சுமணன் குருக்களிடம் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த இந்துக்குருமார்கள் முன்கூட்டி பதிவு செய்ய முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

கிழக்கிலங்கையிலுள்ள இந்துக்குருமாரின் வசதி கருதியும் அவர்கள் வளர்ச்சியடைய வேண்டியும் வேதம், ஆகமம் போன்ற விடயங்களை தெரிந்துகொள்வதற்கும் பூஜை முறைகளை மேலும் சிறப்பாக தெரிந்துகொள்வதற்கும் இந்துக்குருமார்களை வளர்க்கும் நோக்கிலும் தம்மால் இரண்டாவது தடவையாக வேத சிவாகமப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

எனவே, இதில் அனைத்து இந்துக்குருமார்களும் பங்குபற்றி சிறந்த குருமார்களாக விளங்குவதற்கு முன்வருமாறும், அவர் அழைப்பு விடுத்துள்ளார்.




## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை
# பதவி வெற்றிடங்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் நிலவும் பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கல்) பதவி வெற்றிடத்திற்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** : **பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கல்)**
**முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1)**

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 80,295 - 15x2,270 = 144,345/- (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** : ***வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

***அத்துடன்***

பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் / அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

***மற்றும்***

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

***அல்லது***

02. பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

***மற்றும்***

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

***உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)***

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
02. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் அபிவிருத்தி / விரிவாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ MM 1-1 சேவை வகுதியில் 1ஆந் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| II. | இயைபுடைய மேலதிகக் கல்வி / தொழில்சார் தகைமை | - 30 புள்ளிகள் |
| III. | ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| IV. | நேர்முகத் தேர்வின்போதான செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| | **மொத்தப் புள்ளிகள்** | **- 100 புள்ளிகள்** |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் வரிசைக்கிரம புள்ளிகளின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

**ஏனையவை** : அனைத்து ஆட்சேர்ப்பு தொடர்பிலும் நிறுவன கடமைசார் ஒழுங்குவிதி கோவையின் விதிமுறைகள் உரித்தாகும்.

**மேலதிக அனுகூலம்** : தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறும் மருத்துவத் திட்டத்தின் கீழான வசதிகள்

1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் அல்லது அச்சட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களின் வேறு சேமலாப நிதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரினால் சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையில் சேவையாற்றும் முழுமையான காலத்திற்கு அவரின் ஒன்றிணைக்கப்பட்ட சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படியின் 10%த்திற்குக் குறையாத தொகை செலுத்தப்படும் என்பதுடன் அதிகார சபையினால் 15% த்திற்குக் குறையாத தொகை அங்கத்துவத் தொகையாகச் செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகதாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% அதிகார சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவம்** : விண்ணப்பதாரர்கள் தமது அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவத்தைக் காட்டும் சான்றிதழ் மற்றும் வினைத் திறன் மற்றும் திறமைகளுக்கு இயைபான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரச / அரச கூட்டுத்தாபனம் / நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது நிறுவனத் தலைமையின் ஊடாக அவர்களின் சிபாரிசு சகிதம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** : 2023 ஜனவரி மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**



# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு
## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்கு சுகாதார சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்ளல் - 2023/2024

**IFB No.:DNZG/A/10/22/15**

1. ஒரு வருட காலப்பகுதிக்கு பின்வரும் இடப்பரப்புகளுக்கு சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகை குழுத் தலைவா முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| | அமைவிடம்/இடப்பரப்பு | IFB இல. | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| 01. | தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை | DNZG/A/10/22/15/I | 80,000 |
| 02. | பின்னவல யானை காப்பகம் | DNZG/A/10/22/15/II | 75,000 |
| 03. | பின்னவல புதிய மிருகக்காட்சிசாலை | DNZG/A/10/22/15/III | 85,000 |
| 04. | ரிதியகம சவாரி பூங்கா | DNZG/A/10/22/15/IV | 80,000 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீ தியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
3. விலைமனுதாரர்களின் தகுதித்தன்மை தேவைப்பாடு.
   - ஆகக் குறைந்தது 02 வருடங்களுக்கு எந்தவொரு நிறுவனத்திற்கும் சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்குவதில் கடந்தகால அனுபவம்.
   - நிதிசார் திடநிலை
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2710807 என்ற தொலைபேசியூடாகவும் 011-2731851 என்ற தொலைநகலூடாகவும் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுகீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 சனவரி 12 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 31 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் 3,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர் கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரரினால் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் 2023 பெப்ருவரி 01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 பெப்ருவரி 01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்,**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை.**



## கமத்தொழில் அமைச்சு
## COLOMBO COMMERCIAL FERTILIZERS LIMITED
# பகுதி நேர அடிப்படையில் கம்பனி செயலாளர் சேவை

Colombo Commercial Fertilizers Limited இல் கம்பனி செயலாளர் பதவிக்கு தகைமையுள்ள செயலாளர்சார் நிறுவனங்கள் அல்லது விண்ணப்பதாரிகளிடமிருந்து Colombo Commercial Fertilizers Limited இன் தலைவர் விண்ணப்பங்களை அழைக்கின்றார்.

**தகுதித்தன்மை தகவுத்திறன்:**
- சட்டத்தரணியொருவர்.

அல்லது

- பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் கூட்டிணைந்த/ இணைஅங்கத்தினர்

மற்றும்

- கம்பனி செயலாளரொருவராக செயற்படுவதற்கு கம்பனிகளின் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல்.

அத்துடன்

- புகழ்வாய்ந்த நிறுவனமொன்றில் சபை செயலாளர்/ பணிப்பாளர் சபைக்கான கம்பனி செயலாளராக 6 வருட அனுபவத்துடன் ஆங்கில புலமை மற்றும் கணனி அறிவு.

அத்துடன்

**கூட்டிணைக்கப்பட்ட ஆட்சி:**
கம்பனியின் சட்டத்தின் பிரகாரம், சபை அறை சிறந்த கொள்கை உரித்தான அனுமதிகளுடனான நியமனம் மற்றும் பணிப்பாளர்களின் தூண்டல், பணிப்பாளர்களின் கடமைகள் மற்றும் நோக்கங்கள், சபை கூட்டங்களில் சிறந்த கொள்கைகளை கையாளுதல் அடங்கலான கூட்டிணைக்கப்பட்ட ஆட்சியின் சிறந்த கொள்கையில் சபை பணிப்பாளர்களை வழிநடத்தல்.

**சேவையின் நோக்கம்:**
- சபைக் கூட்டங்களை கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பின்பற்றுவதை உறுதிப்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தாக்கம் விளைவிக்கும் கடமைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக சபைக்கு அறிவுரை வழங்கல்.
- சமர்ப்பிக்கப்படும் சபை அறிக்கைகள் விரிவானவைகளாகவும் ஆகக் குறைந்தது பின்வருவனவற்றை அடக்குவதாகவுமிருத்தல்.
  - விடயத்தின் பின்புலம்.
  - உரித்தான பிரிவினதும் பிரதான நிறைவேற்று அலுவலகரினதும் கையொப்பங்களுடனான பரிந்துரைகள்.
  - அனுமதிகளை கோரும் சபை தீர்மானங்கள்
- கலந்தாலோசிக்கப்படவுள்ள சபையின் அனைத்து விடயங்களும் உரிய முறையில் சபை பணிப்பாளர்களுக்கு சபை கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னராக சுற்றிப்பரப்புதலை உறுதிப்படுத்தல்.
- அவசரமான விடயமாக இல்லாவிடின், சுற்றிப்பரப்புதல் மூலம் சபை தீர்மானங்களை எடுப்பதை தடை செய்வதை உறுதிப்படுத்தல். (இது சட்டத்திற்கான விதிவிலக்கு அன்றி நடைமுறை அல்ல)
- சபை விடயங்கள், தொடர்பாக தலைவருடன் சேர்ந்து பிரதான நிறைவேற்று அலுவலகர் மற்றும் முகாமைத்துவத்துடனும் ஒருங்கிணைந்து கூட்ட நிகழ்ச்சி நிரல்களை தயாரித்தல் மற்றும் கூட்டத்திற்கான நினைவுக் குறிப்புக்கள் அல்லது கூட்டத்திற்கான சமர்ப்பித்தல்கள் ஆகியவைகளையும் ஆயத்தம் செய்தல்.
- சபைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து சமுகமளித்தல் அத்துடன் பொருத்தமான பாங்கில் சபை செயற்பாடுகளின் குறிப்புக்களை துல்லியமாக பேணல்.
- சபையின் உபகுழுக்களுக்கும் செயலாளராக செயற்படுதல்
- பங்குதாரர்களுடனான பொது கூட்டங்கள் அல்லது வருடாந்த செயற்பாட்டு மீள்நோக்க கூட்டம் ஆகியன நடைபெறுவதற்கான தேவையான ஆயத்தங்களை மேற்கொள்ளல்.

வயது : விண்ணப்பங்களை மூடும் திகதியன்று 50 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.
வருடாந்த கட்டணம் : 50,000 ரூபா.
ஒவ்வொரு சபை அமர்விற்குமான படி : 13,500 ரூபா.

**பொதுவானது:**
உங்களுக்கு ஆர்வம் இருப்பின் அத்துடன் உரித்தான தகைமைகள் மற்றும் அனுபவமும் இருப்பின், தயவு செய்து உங்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் அத்துடன் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியவற்றை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2023 சனவரி 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்புதல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிந்துரைக்கவும்.

கவனமான குறிப்பு: உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளில்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதை தயவு செய்து கவனத்தில் வைத்திருக்கவும்.

**தலைவர்,**
**Colombo Commercial Fertilizers Ltd.**
**ஹுனுப்பிட்டி,**
**வத்தளை.**
**திகதி: 10 சனவரி 2023.**

## நிதி அமைச்சு
## இலங்கை சுங்கத் திணைக்களம்

# பிரசித்த ஏல விற்பனை

இலங்கை சுங்கத்திணைக்களத்தின் அழித்தல் பிரிவில் நிறுவப்பட்டுள்ள பழைய நீளமான அறைக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளதும் தற்பொழுது செயற்பாடற்ற நிலைமையில் உள்ளதுமான மத்திய வளிச்சீராக்கல் இயந்திரம் மற்றும் குழாய் தொகுதியை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர், இவ் ஏல விற்பனையில் பங்கேற்குமாறு இத்தால் அழைக்கப்படுகின்றனர்.

ஏல விற்பனைக்கான பண்டங்களை பார்வையிடக்கூடிய முகவரி: இலங்கை துறைமுக அதிகார சபையின் நுழைவாயில் இலக்கம் 01 இற்கு அண்மையிலுள்ள பழைய நீளமான அறைக்கட்டிடம்

| | |
|---|---|
| பரீட்சிக்கக்கூடிய தினங்கள் | : 2023 ஜனவரி 16 முதல் 2023 ஜனவரி 30 வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.3.00 வரை |
| ஏல விற்பனை இடம்பெறும் திகதி மற்றும் நேரம் | : 2023 ஜனவரி 31 அன்று பி.ப.2.00 இற்கு |
| ஏலவிற்பனை இடம்பெறும் இடம் | : இலங்கை முறைமுக அதிகார சபையின் நுழைவாயில் இல.01 இற்கு அண்மையிலுள்ள பழைய நீளமான அறைக் கட்டிடம் |
| நிபந்தனைகள் | : ஏலவிற்பனையில்தீர்மானிக்கப்படும் தொகையைச் செலுத்தி, மத்திய வளிச்சீராக்கல் இயந்திரம் மற்றும் குழாய்த்தொகுதியை 14 நாட்களிற்குள் அகற்றிக்கொள்ளல் வேண்டும். |

**சுங்கப்பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கத் திணைக்களம்**
**இல.40, பிரதான வீதி, கொழும்பு - 11**
**தொலைபேசி : 0112221677.**

---

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

### மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2022 செப்டம்பர் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 ஜனவரி 24ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை / மத்தியஸ்தானம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதி , கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே, மாத்தளை மற்றும் தம்புல்ல | 2022 செப்டெம்பர் 30ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க
மாவத்தை, கொழும்பு 08

---

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.10.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 26.01.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**26.01.2023**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
சேமிப்பாளர்களின் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

## புடைவைக் கைத்தொழில் திணைக்களம்

# 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

பின்வரும் வேலைகள் மற்றும் சேவைகளுக்கு 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர். இதன் பொருட்டு புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ஒவ்வொரு வகுதிக்கும் 1000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இயைபுடைய மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து பதிவு செய்து கொள்ளலாம். 2023.01.13ஆம் திகதி முதல் 2023.01.26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

1. காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல்
2. கைத்தறி இயந்திரம், பைண்டிங் இயந்திரம், வொப் ரோல் வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல்
3. கைத்தறி இயந்திரங்களுக்கான துணைப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
4. கைத்தறி புடைவை நெய்வதற்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் நூல் வழங்குதல்
5. கணனி, அச்சு இயந்திரங்களை சேர்விஸ் செய்தல், பராமரித்தல் மற்றும் கணனி வலையமைப்புக்கு உற்படுத்துதல்
6. வீட்டுத் தளபாடங்கள் (மரம் மற்றும் உருக்கு) மற்றும் மின் உபகரணங்களை வழங்குதல்
7. வாகன உற்பாகங்கள் மற்றும், இயந்திரக் கோளாறு உட்பட அனைத்து வாகன திருத்தவேலைகள்
8. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
9. குறுகியகால வாடகை அடிப்படையில் பயனிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கான வாகனங்களை வழங்குதல்.
10. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
11. சுத்திகரிப்பு வேலைகள்
12. காணொளி பதிவு மற்றும் புகைப்படமெடுத்தல் மற்றும் சார்ந்த ஆக்கங்களைத் தயாரித்தல்.
13. அச்சு வேலைகள் மற்றும் கிரபிக் சார்ந்த ஆக்கங்கள் (Graphic Design)
14. வாடகை அடிப்படையில் ஒலிபெருக்கி சாதனங்களை வழங்குதல் மற்றும் ஒளியூட்டல் வசதிகளை வழங்குதல்
15. நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவுப் படிகங்களைத் தயாரித்தல்
16. செயலமர்வுகள் மற்றும் கண்காட்சிகளுக்கான உணவு பானங்களை வழங்குதல்
17. பிரசார அறிவித்தல் பலகைகளைத் தயாரித்தல் (Outdoor Advertising)
18. புடைவைக் கைத்தொழில் துறைக்குரித்தான செயலமர்வுகள் மற்றும் ஆளுமை மேம்பாட்டு செயலமர்வுகளுக்கான வளப் பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்தல்
19. கண்காட்சி மற்றும் ஏனைய உற்சவங்களுக்கான மண்டப வசதிகள்
20. கொட்டகைகள்/கதிரைகள்/கொடிக் கம்பங்கள்/வெளி மறைப்புகள் (Canopy Hall)/கூடாரக் கதிரைகள் மற்றும் தளபாடங்களை வழங்குதல்
21. மொழிபெயர்ப்பு - மும்மொழிகளும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்)
22. கண்காட்சி முகாமை மற்றும் வடிவமைத்தல்
23. இணையதளங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்
24. பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்
25. பாதுகாப்பு கெமரா அமைப்பை பொருத்துதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
26. டுப்ளோ இயந்திரம், போட்டோப்பிரதி இயந்திரம், Fax இயந்திரம், UPS இயந்திரம், அச்சு இயந்திரம், Multimedia Projector, Scanner, விரல் அடையாள இயந்திரம் மென் பொருள் சேவை மற்றும் பழுதுபார்த்தல்.
27. வளிச்சீராக்கி இயந்திரம் சேர்விஸ் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
28. இலக்ரோனிக் ஜகாட் உட்பட தன்னியக்க நூல் நெய்யும் இயந்திரம் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் உற்பத்தி செய்தல்.
29. “டை” வகைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட இரசாயன பொருட்கள் வழங்குதல்
30. பாவனைப் பொருட்கள் (நுளம்பு வலை, மெத்தை, சமையலறை உபகரணம்) வழங்குதல்
31. சுகாதார நுகர்வுப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (Sanitizer, Mask)
32. உள்ளக மின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ்
33. வாடகை அடிப்படையில் தற்காலிக விற்பனை கூடங்கள் மற்றும் கண்காட்சி கூடங்களை தயாரித்தல்.

**இணைப்பு I**

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான மாதிரிப் படிவம்**

| பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி இலக்கம் | வழங்கும் சேவை அம்சத்தின் பெயர் | வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி இலக்கம் | | தொலை நகல் இலக்கம் | E mail முகவரி | வழங்கும் சேவை விபரங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | கையடக்க | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

**திகதி:** **கையொப்பம்** **நிறுவன உத்தியோகபூர்வ முத்திரை**

**கவனிக்க வேண்டியது:**
1. கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு இக்டாட் பதிவுத் தரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
2. இந்த விண்ணப்பப் படிவத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏனைய சேவை வழங்கும் நிறுவனங்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**புடைவைக் கைத்தொழில் திணைக்களம்,**
**3வது மாடி, பொதுச் செயலக அலுவலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி இல. 0112322895/96**

---

## பெறுகைக்கான அறிவித்தல்

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**
நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

### பொருட்களுக்கான கொள்முதல்

### தேசிய போட்டி முறையிலான விலைமனு (NCB)

### மடிக் கணினிகள் மற்றும் கணினி வன்பொருள்

### IFB NO. : ETF/PROC/A/2022/138

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை சார்பாக, கொள்முதல் குழுவின் தலைவரினால், மடிக் கணினி வன்பொருளை வழங்குவதற்கும் பரிசோதனை செய்வதற்கும் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி.

| உருப்படி இலக்கம் | விபரம் | அளவு / அலகு | மனு பாதுகாப்பு தொகை (ரூ.) | மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காலம் | குறைந்தபட்ச வேலை மூலதனத் தேவை அல்லது நிதி வசதிகள்: (ரூ. மில்லியன்) | ஆண்டு சராசரி விற்றுமுதல் மில்லியன் ரூபாய் அல்லது (கடந்த ஆண்டு அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Laptop Computers | 124 | 500,000.00 | 2023 மே 09 | 25 | 50 |
| 2 | ADF Scanners | 35 | 400,000.00 | 2023 மே 09 | 20 | 30 |
| 3 | Personal Computers | 10 | 25,000.00 | 2023 ஏப்ரல் 25 | 2 | 3 |
| 4 | QR Code Scanners | 45 | 30,000.00 | 2023 ஏப்ரல் 25 | 2 | 3 |
| 5 | QR code Printers | 21 | 20,000.00 | 2023 ஏப்ரல் 25 | 2 | 3 |
| | | **மொத்தம்** | **975,000.00** | | **51** | **89** |

01. மனுகோரலானது, தேசிய போட்டி முறைக்கமைய கோரப்படுகின்றது. (NCB).

02. மனுதாரர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களுக்கான மனுக்களை சமர்ப்பிக்கலாம், அதே நேரத்தில் மனு ஒப்பீடுகளின் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தங்களை வழங்குதல் ஆகியவை ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் செய்யப்படும்.

03. பல்வேறான விருப்பங்களுக்கு அனுமதி இல்லை. கொள்வனவு செய்பவரின் விவரக்குறிப்புகளுக்கு மட்டுமே இணங்க வேண்டும்.

04. ஆர்வமும் தகுதியும் உள்ள மனுதாரர்கள் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை கொள்முதல் பிரிவிலிருந்து (தொலைபேசி இலக்கம் : 011-7747236 / 011-2806198) ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம், மேலும் பின்வரும் முகவரியில் **2023.02.06** ஆம் திகதி அலுவலக நேரத்தில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 03.00** மணி வரை ஆவணங்களைச் சரிபார்க்கலாம்.

05. மனுதாரர்கள் இந்த தயாரிப்புகளை சரியான வணிகப் பதிவுடன் வழங்குவதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச செயல்பாட்டு மூலதனத் தேவைகள் அல்லது நிதி வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் தொடர்புடைய துணை ஆவணங்கள் மனுவுடன் வழங்கப்பட வேண்டும். ஏனைய மேலதிக தகுதிகள் மற்றும் அனுபவம் மனு ஆவணங்களில் உள்ளடங்கும்.

06. மனு ஆவணங்கள் **2023.01.16** ஆம் திகதி முதல் **2023.02.06** ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் **மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30** மணி வரை வழங்கப்படும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் மற்றும் மீள்ச்செலுத்தப்படாத கட்டணம் **ரூ.12,500,000** (பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயை) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் கொள்முதல் பிரிவில் பணமாக செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட ஆவணத்திணை பெற்றுக்கொள்ளலாம்.

07. மனுதாரர்களுக்கான முன்மனுக் கூட்டம் (pre bid meeting) டிை **2023.01.24** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, இலக்கம் 44/5, நாரஹேன்பிட்டி வீதி, நாவல, 1வது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

08. மனு ஆவணங்கள் பின்வரும் முகவரிக்கு **2023.02.07** அன்று அல்லது அதற்கு முன் **பி.ப.2.00** மணிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்தவுடன் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும். மனுஆவணங்கள் அடங்கிய உறையின் மேல் மூலையில் **"Supplying of IT Hardware"** எனக் குறிப்பிட வேண்டும்.

09. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கியிடமிருந்தும் பெறப்படும் மனு பாதுகாப்பு அறிக்கையுடன் அனைத்து மனுக்களும் காணப்பட வேண்டும் மற்றும் மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கான மேலே குறிப்பிட்டுள்ள மனு பாதுகாப்பு மதிப்புடன் 23ம் மாடி, மெஹெவர பியெச, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 இல் சமர்ப்பிக்க வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு
**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**
23ம் மாடி, மெஹெவர பியெச, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

**வனவிலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்**

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2023

**DNZG/A/10/22/12**

குறித்த தலைப்பில், 2022.12.08 அன்று இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மருத்துவ வழங்கல்கள், வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் (பஸ்கள்) களிற்காக வழங்குநர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான அறிவித்தலின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி 2023.01.20 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம், தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்,**
**அனகாரிக தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை**

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

**ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலஜி**
**(Sri Lanka Institute of Biotechnology Pvt Ltd)**
SLIBTEC 1ஆம் படிநிலை கட்டிடம், மெஹென்வத்த,
தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம
+94 11 343 1844 https://slibtec.gov.lk/

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2023

2023ஆம் வருடத்தில் வ/ப இலங்கை உயிரியல்தொழில்நுட்ப தனியார் நிறுவனத்திற்கு (SLIBTEC) பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் சேவை புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச உற்பத்தியாளர்கள், ஏக முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை அழைக்கின்றது.

### பொருட்கள்

1. ஆய்வுகூட உபகரணங்கள்
2. ஆய்வுகூட பாவனைப்பொருட்கள் (சிரிஞ்சுகள், மையவிளக்கு குழாய்கள், குழாய் குறிப்புகள், இரத்த சேகரிப்பு குழாய் போன்றவை)
3. ஆய்வுகூட கண்ணாடி பொருட்கள்
4. ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள்
5. வாயுக்கள் மற்றும் உறைநிலை பனிகள் (திரவ N2, உலர் பனி போன்றவை)
6. ஆய்வுகூட துணைப்பாகங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (முகக் கவசம், முகமூடிகள், அறுவை சிகிச்சை கையுறைகள், ஆய்வுகூட கோட்டுகள், காலணி உறைகள், காலணிகள், PPE கிட்கள் போன்றவை)
7. IT வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்புகள் (கணனிகள், மடிக்கணனிகள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், மல்டிமீடியா புரஜெக்டர்கள், புகைப்படப்பிரதி இயந்திரங்கள் மற்றும் பிற இறுதிப் பயனர் புற சாதனங்கள் / துணைப்பாகங்கள் போன்றவை)
8. கணனி மென்பொருள் மற்றும் செயலிகள்
9. வலையமைப்பிடல் மற்றும் தொடர்புடைய துணைப்பாகங்கள்
10. அச்சிடல் பாவனைப் பொருட்கள் (டோனர், கார்ட்ரிட்ஜ், ரிப்பன், இமேஜிங் டிரம் போன்றவை)
11. தொலைபேசி/ IP தொலைபேசி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
12. ஆய்வுகூட தளபாடங்கள்
13. அலுவலக தளபாடங்கள்
14. அலுவலகம்/ மின்சார உபகரணங்கள் (மைக்ரோவேவ், Shredder, குளிர்சாதனப் பெட்டி போன்றவை)
15. அலுவலக காகிதாதி வழங்குநர்கள்
16. உட்புற/ வெளிப்புற பிராண்டிங், விளம்பரம் மற்றும் Signage
17. இலவச வழங்கல்கள் (Complementary), விளம்பரப் பொருட்கள் மற்றும் கோர்ப்பரேட் பரிசுப் பொருட்கள் (டி-ஷேர்ட்கள், தொப்பிகள், பயணப் பைகள், குடைகள், குவளைகள், டையரிகள் போன்றவை)
18. இரசாயனங்களை சுத்தம் செய்தல்
19. IT மற்றும் இலத்திரனியல் தொடர்பான பராமரிப்புக் கருவிகள்
20. திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள் மற்றும் பெயர் பலகைகள் (அலுமினியம்/ பிளாஸ்டிக்/பித்தளை போன்றவை)
21. மின்சார வயரிங் பாகங்கள் மற்றும் கருவிகள்
22. குழாய்வேலை பொருட்கள் மற்றும் கருவிகள்
23. நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, மணல், செங்கல், சீமெந்து புளக்குகள், மரம், நிறப்பூச்சி மற்றும் தொடர்புடைய வன்பொருள் பொருட்கள்)
24. பிளாஸ்டிக் பொருட்கள்
25. தோட்டக்கலை துணைப்பாகங்கள்
26. ஆய்வுகூட ரீஜென்ட் (மூலக்கூறு உயிரியல்)
27. கழிவு முகாமைத்துவப் பொருட்கள் (அனைத்து வகையான குப்பை பைகள் மற்றும் தொட்டிகள், கூர்மையான கொள்கலன்கள், பருத்தி துணி, Spill Kit)
28. ஆராய்ச்சி மற்றும் மருத்துவ ஆய்வுகூட வழங்குநர்கள்

### சேவைகள்

1. ஆய்வுகூட பரிசோதனை
2. பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாண சேவைகள்
3. சட்ட சேவைகள்
4. மென்பொருள்/ இணையதள அபிவிருத்தி சேவைகள்
5. தொலைத்தொடர்பு சேவைகள்
6. அச்சிடும் சேவைகள்
7. பாதுகாப்பு சேவைகள்
8. சுத்திகரிப்புச் சேவைகள்
9. தேநீர் சேவைகள்
10. நிகழ்வுகளுக்கான கேட்டரிங் சேவைகள்
11. நிகழ்வுகளுக்கான தளபாட வாடகை சேவைகள்
12. குடிநீர் சேவைகள்
13. சந்தைப்படுத்தல்/ விளம்பர முகவர்கள்
14. பானை தாவரங்கள்/ நிலச்சீராக்க சேவைகள்
15. காப்புறுதிச் சேவைகள்
16. புகைப்படப்பிடிப்பாளர்கள் மற்றும் வீடியோகிராபர்கள்
17. டிசைனிங் மற்றும் வரைதல் வேலைகள்
18. கூரியர் சேவைகள்
19. வாகன திருத்தவேலை சேவைகள்
20. வாகனங்களுக்கு டயர் மாற்றும் மற்றும் சீரமைப்பு சேவை
21. உள்ளக வடிவமைப்பாளர்கள் மற்றும் வழங்குநர்கள்
22. பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கான வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்
23. கழிவு முகாமைத்துவ சேவை (மருத்துவ, இரசாயன, கதிரியக்க, தொற்று, முதலியன)
24. சலவை சேவைகள்
25. விற்பனை சேவைகள்
26. வளிச்சீராக்கி பராமரிப்பு சேவைகள்
27. குழாய்வேலை மற்றும் மின்சார சேவைகள்
28. மனிதவலு வழங்கும் சேவைகள்
29. வெல்டிங் வேலைகள்
30. மேசன், தச்சு, நிறப்பூச்சு வேலைகள்
31. வரி ஆலோசகர் சேவை
32. கணக்காய்வு நிறுவனங்கள்
33. DNA Sequencing (Dideoxy)
34. சுற்றுச்சூழல் பகுப்பாய்வு சேவைகள் (காற்று, சத்தம், நீர்/ கழிவுநீர் மற்றும் அதிர்வு)
35. உயிர்ப்பு தீயணைப்பு சேவைகள் வழங்குநர்கள்
